
# காஞ்சி

ஞாயிறு மலர்



விலை 20 காசு

4-4

20-8-67

# என்னடி சிரிப்பு?

—[ புலவர் பொன்னிவளவன் ]—

பொன்னைப் மின்னிப் பூவாய்ச் சிரிக்கப் பெண்ணாய்ப் பிறந்துவிட்டவள் அவள். விண்ணிலே நிலவு! மண்ணிலே இவள்! அங்கா? இங்கா? எங்கே இருப்பது என்று புரியாமல் தெரியாமல் அழகு கிடந்து திண்டாடும்! ஆட்டத்தில் அவள் மயில்! பாட்டில் அவள் குயில்! துள்ளலில் அவள் மான்! அவள் சொற்களிலோ சொட்டும் தேன்! நடையிலே அவள் அன்னம்! அவளுக்கு மாம்பழக் கன்னம்! உதடுகள் அவளுக்குத் தேன் கிண்ணம்!

சிரிப்பில் அவளிடம் தோற்கும் முத்து! சிங்காரி அவள் பலர் நெஞ்சிற்கு இனிக்கும் கனிக் கொத்து! அவளுக்கோ ஒருவன் மேல்தான் மனப் பித்து!

கொஞ்சிவரும் கோகிலமே! கோமளமே! குளிர் நிலவே! நெஞ்சத்துத் தாமரையே! நித்திலமே! ரத்தினமே!' இப்படிக் கொஞ்சி இதழ் திறந்து இதழ் விருந்து வைத்தவனு அவன்? இல்லை? இன்னும் அவன் பேசத் தொடங்கவில்லை இருந்தாலும் அவன் விழிகளில் ஆசை அடங்கவில்லை! பழுத்த பழமாக அவளை மதித்துப் பல்லில்லாத விழிகளால் மென்று விழுங்கினான். யார் நீ? இப்படி அவனைக் கேட்க முடியவில்லை! அவன் எடுத்துச் சென்றுவிட்ட இதயத்தையும் அவனிடமிருந்து மீட்கமுடியவில்லை.

அரும்பாக இருந்து குறும்போடு திரிந்த நாளில் ஆண் துணையை விரும்பாத பெண்தான். இப்போதோ பூத்த மலரானாள்; புரியாத புதிருக்குச் சரியான விடை தேடிக் காத்திருந்து வரலானாள்! முன்போ குங்குமம் அவள் நெற்றிக்குத் திலகம். விளையாட்டு அவள் தனி உலகம்! இப்போதோ குங்கும வண்ணம் அவள் கன்னத்தில் பழகும்! குதித்துக் கும்மாளமிடும் துணிவு அவள் இதயத்தைவிட்டு விலகும்! அவளோ அழகின் திருஉருவம்! அழகை அவளிடத்தில் ஒப்படைத்து அவளை ஆட்டிப்படைக்கிறது பருவம்! மணக்கின்ற மலருக்கு வண்டு! இனிக்கின்ற வெல்லத்திற்கு எறும்பு! பழுக்கின்ற பழத்திற்கு வௌவால்! துடிக்கின்ற எனக்கு யார்? வினாவிற்கு விடை தேடினான் அவள். விடையாகத் தோன்றி அவள் விழிகளுக்கு விருந்தாகி நின்றான் அவன்.

பறிக்க வேண்டிய பூக்களைப் பறிக்காமல் மறந்தாள்: பாவை அவனைப் பார்த்தபடி இருந்தாள். தோழியும் அருகில் இல்லை. 'என்னடி இது தொல்லை? ஏன் என்னை இப்படி உற்று உற்றுப் பார்க்கிறான்?' சால் மிதிக்கும் மண்ணில் கடைவிரல் நகம் கன்னுபின்னுக் கோலம் போட்டது. கண்களும் நில ஆராய்ச்சி நடத்தின, தலையோ தானாகக் குனிந்து கொண்டது. மனமோ கேள்வி கேட்டது நிமிர்ந்து பார்த்தாள்; நிமிர்ந்த நேரத்தில் விரும்பிப் பார்த்தவன் திரும்பி நடந்துகொண்டிருந்தான். இருந்த எதையோ இழந்துவிட்டதைப்போன்ற உணர்வு அவளுக்கு. ஆமாம்! இழந்துவிட்டது உண்மைதான்! இழந்துவிட்டது வேறொன்றையுமல்ல அவளுடைய இதயத்தை!

இது முதல் நாள் சந்திப்பு. இரவில் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை; ஏக்கம் தணியவில்லை. ஒருநாள் செத்து மறுநாள் பிறக்கிறது. மறுநாள்—

அதற்கு மறுநாள். ஒவ்வொரு நாளும் அவளுக்கு வெறும் நாளல்ல; திருநாள்! ஏன் தெரியுமா? அவன் வந்தான்; பார்த்தான்; சிரித்தான், சென்றான். எத்தனை நாளைக்கு இந்த ஊமை நாடகம்? இருப்பதைக் கேட்டால் இல்லையென்று சொல்லி விடுவேன்?' வெளியிலே சொல்லமுடியாமல் வெட்கம் தடுத்தது. அவள் பொல்லாத உள்ளமோ இல்லாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணித் துடித்தது.

தங்கக் குழம்பில் செங்கதிர்ப் பழம் மிதக்கும் காலை! பூத்துச் சிரித்தது சோலை! பூப்பறிக்கப் புறப்பட்டாள். அதுதான் அவள் வேலை! அங்கே வந்து நின்றான் அந்தக் கட்டிளங்காளை; சிரித்தான்; பதிலுக்குச் சிரித்தாள். கண்களைச் சிமிட்டி ஏதோ கேட்டான்; கண்களை அகலவிரித்து என்னவோ சொன்னாள். நாணம் பிறந்தது அவளுக்கு! அச்சம் பிறந்தது அவனுக்கு!

"பூக்களைக் கொய்து தரட்டுமா? நானும் உன் பின்னால் வரட்டுமா?"

வாய்திறந்து கேட்டான். அவளோ வாயைத் திறக்கவில்லை, வா என்று சொல்லாமல் சொன்னாள் தலையசைவின்மூலம். பூவைப்பறித்துச் சேர்த்தான்; அந்தப் பூவையை அடிக்கடிப் பார்த்தான். அவள் ஏக்கத்தைத் தீர்த்தான்; இதயத்தை ஈர்த்தான்.

'பூவைத் தலையில் வைக்கட்டுமா?'

கேள்விக்கு விடையாக அவள் தலைதான் அசைந்தது. இதுபோதும். தலையே இதற்காகத்தான் இருக்கிறதோ? பூவைத் தலையிலே வைப்பதற்குக் கையைத் தோளிலே வைப்பானேன்?'

தொட்ட இடம் சிலிர்த்தது. அந்தத் தோகையின் மனம் குளிர்ந்தது. அவளை அவராக்கி என்ன என்பதை என்னங்க ஆக்கி ஏன் என்பதை ஏங்க ஆக்கி ஏங்கிக் கிடந்தவளின் ஏக்கநிலை போக்கிற்றுப் பழக்கம், வருவது வழக்கமாகிவிட்டது. முத்தம் தருவதுவாடிக்கை ஆகிவிட்டது, பேச்செல்லாம் வேடிக்கை — விளையாட்டு! இந்த விளையாட்டு அவளுக்குப் புதிய விளையாட்டு! சுகம் புரிந்துவிட்டது! சொந்தம் தெரிந்துவிட்டது! அவள் அவனுக்கு! அவன் அவளுக்கு! சும்மா இருக்க முடியுமா?

சும்மா இருக்குமா ஊரும்? கண்ட கண்ட நாக்கெல்லாம் கண்வைத்து மூக்குவைத்துக் கதை யளக்கத் தொடங்கிற்று! ஒருவருக்கும் தெரியாமல் ஆண்பெண் இருவருக்கு மட்டுமே தெரிந்திருக்கும் இந்த உறவுத் திருவிளையாடல் பலருக்கும் தெரிந்து பலவிதமான பேச்சு எழுகிறதே இதற்கு இலக்கிய வார்த்தை அலர். அவர்களைப்பற்றி அலர் எழுந்தது.

வயிற்றெரிச்சல் படைத்த பிறரின் வம்பளப்புக்குப் பயந்து காரியத்தை நிறுத்தமுடியுமா? காணல் — பேசல்—காதலித்தல்—மணம் புரிதல் வாலிப வயதினருக்குக் காலம் அமைத்துத்தரும் நீண்டகால நிகழ்ச்சி நிரல் இது. இதிலே ஏன் மாற்றம்? எதற்காக ஏமாற்றம்?

அவர்களுக்கு முன்பு இடம் சோலை! இப்போது தினைப்புனம்! இடம் மாறுமே தவிர மனம்

( 14-ம் பக்கம் பார்க்க )

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5.

மலர் 4 20-8-67 இதழ் 4

# இதுவும் ஒரு சடங்குதான்?

இந்தியத் துணைக் கண்டம் விடுதலைப் பெற்று விட்டதாக அறிவிக்கப் பெற்று இருபதாண்டுகள் மறைந்தோடிவிட்டன. அந்த இருபதாண்டுகளிலும், துணைக் கண்டத்தின் சரித்திர நிகழ்ச்சிகளில் விரும்பத்தக்கவையும் அல்லாதவையுமான எத்தனையோ நிகழ்ந்தும் முடிந்துமிருக்கின்றன.

இத்திங்கள் 14-ம் நாள் இரவு குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள், அன்று நள்ளிரவில் மலரவிருந்த 21-வது சுதந்திர நாள் குறித்த நல்லாசியினை வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு நல்கி இருக்கிறார்.

குடியரசுத் தலைவருடைய பேச்சின் பெரும்பகுதி, இந்திய நாடு சுதந்திரம் பெறப் பட்டபாட்டினையும், பெற்றபின் அது வளர்ந்திருப்பதாகக் கூறப்படுவதற்கான சில பல புள்ளி விவரங்களையும் தனதாக்கிக் கொண்டு விட்டு, இறுதிக் கட்டமாக எதிர்கால இந்தியா பற்றியும் கொஞ்சம் தொட்டுக் காட்டி இருக்கிறது.

அதில் ஒரு பகுதி—

'...ஒவ்வொரு அரசாங்கமும் அதன் மாநில மக்களது நன்மையையே நாடுவதாக இருப்பதால், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சரி அல்லது மாநில அரசுகளுக்குள்ளேயும் சரி, சச்சரவுகள் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை; கருத்து வேறுபாடுகள் எதுவும் ஏற்பட்டால், நல்லெண்ணமும், பொதுப் பணிக்கு உழைக்கும் ஆர்வமும் இருக்கும்போது அவற்றில் ஒத்துப்போக முடியும். நமது வளர்ச்சித் திட்டங்களின் திருப்பு முனையில் இருக்கும் நமக்கு, இப்போது ஸ்திரத் தன்மை மிகவும் அவசியம். நமது நோக்கத்திலிருந்து நம்முடைய கவனம் கலைந்துபோகும்படி நாம் விட்டுவிட முடியாது''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் பதவி வகிக்கும் ஒருவருடைய ஆசைகள் எல்லாம், தன் நாடும் மக்களும் எல்லா நலனும் வளனும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்பதாகத்தான் இருக்க முடியும்—இருக்க வேண்டும். அந்த வகையில்தான் திரு. ஜாகிர் உசேன் அவர்களுடைய உரையும் அமைந்திருக்கிறது. அது பற்றி நாம் மகிழவே செய்கிறோம்.

ஆனால்—

இந்தப் பேச்சிலிருந்து நமக்குப் புதிய சில ஐயப்பாடுகள் எழுகின்றன. நியாயமான இந்த ஐயப்பாட்டைத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு குடியரசுத் தலைவருக்கு உண்டு.

அண்மையில் மத்திய கல்வி அமைச்சர் திரு. திரிகுண சென் அவர்கள் டெல்லியில் பேசும்போது—

''இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும்; வருகிற ஐந்து ஆண்டுகளில் பல்கலைக் கழகங்களிலிருந்து ஆங்கிலம் அகற்றப்பட்டு—அந்த இடத்தை வட்டார மொழி பிடிக்கும்.!'

என்று பேசி இருக்கிறார்.

அவரை அடுத்து மத்திய துணைக் கல்வி அமைச்சர் திரு. ஷெர்சிங் அவர்கள் பெங்களூரில் இந்தக் கிழமை பேசும்போது,

''...கல்வி கற்ற சிலர் தான் ஆங்கிலத்துடன் இணைந்து பிணைந்து இருக்கின்றனர்.

மத்திய அரசிலும், மாநில அரசுகளிலும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இல்லை— என்ற நிலை யேற்படுகிறபோது, இந்திதான் அந்த இடத்திற்கு வரவேண்டும்.

ஆகவே, இந்தி மட்டுமே பாடமொழியாக கட்டாயம் மாறியாக வேண்டும்''

என்றும் தன் கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இருகிழமைகளுக்கு முன் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், பிராங்க் அந்தோணி என்ற மக்களவை உறுப்பினரிடம் உரையாடிய நேரத்தில்—

''ஆங்கிலத்தை அறவே அழித்தால்தான் இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் இந்தி, இந்த நாட்டின் ஏகபோகத் தொடர்பு மொழியாக ஆகமுடியும். இந்தி வேண்டுமா? ஆங்கிலம் வேண்டுமா? என்கிற பிரச்னையை மாணவர்களிடமும், கல்வி நிபுணர்களிடமும் விட்டால், பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் ஆங்கிலமே வேண்டும் என்று தீர்மானிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.''

என்று தன் இதயத்தின் அடித்தளத்தை விண்டு காட்டி இருக்கிறார் பிரதமர்.

இந்நிலையில், இந்தித் திணிப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து நின்ற இந்தி பேசாத மாநில மக்களுக்கு என்று முன்னாள் பிரதமர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்குச் சட்ட வடிவம் கொடுத்து, அவர்களது நல்ல உணர்ச்சிக்கு மதிப்பளிக்கத் தவறியும், இந்தி பேசுகிற பகுதி பிரதிநிதிகளின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியும், சட்ட வடிவம் ஆக்கும் ஆட்சி மொழித் திருத்தச் சட்டத்தை—கால நீட்டிப்புச் செய்துகொண்டு வருகிறது மத்திய அரசு.

ஒருபுறம் ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்துக்குக் கால நீட்டிப்புச் செய்து வரப்படுகிற வேதனை,

மறுபுறம் — முக்கிய பதவியிலிருக்கின்றவர்களால், ஆங்கிலம் அகற்றப்படும் — அழிக்கப்படும் என்ற அச்சுறுத்தல்,

கல்வி அமைச்சர், துணைக் கல்வி அமைச்சர் ஆகியோர்களது அச்சுறுத்தலைவிட, பிரதமரின் அச்சுறுத்தல், உண்மையிலேயே அஞ்சத்தக்க வடிவத்திலிருக்கிறது.

> ' இந்தியா? ஆங்கிலமா? என்ற பிரச்னையை மாணவர்களிடமும், கல்வி நிபுணர்களிடமும் விட்டால், அவர்கள் பல்வேறு காரணங்களுக்காக ஆங்கிலமே வேண்டும் என்பார்கள்!''

என்கிறார்.

இதிலிருந்து இந்தி விஷயத்தில் பிரதமர் அவர்கள் தமது ஏகபோக இஷ்டத்தின்படிதான் அந்த விவகாரத்தை ஆக்கிக்கொள்ள நினைக்கிறார் என்பதும் ஜனநாயக நெறிக்கு இடம் தரும் மனப்பாங்கு அவரிடம் இல்லை என்பதும் துல்லியமாகக் காணக் கிடைக்கிறது.

நாலாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இந்தியா சந்தித்திருக்கிற புதுமைகள் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் கருத்தறிவித்திருக்கிற திரு. டாக்டர் உசேன் அவர்களது பேச்சில், மேலே கூறப்பட்ட ஆட்சேபிக்கத்தக்க மொழி விவகாரம் பற்றியும், அதில் மத்திய அரசு இவ்வளவு துடிப்புக் காட்டவேண்டியதன் அவசர அவசியம் பற்றியும் ஒரு வார்த்தைகூட காணப்படவில்லை. ஆனால்,

> ''வளர்ச்சித் திட்டங்களின் திருப்பு முனையில் இருக்கும் நமக்கு இப்போது ஸ்திரத்தன்மை மிகவும் அவசியம்; நமது நோக்கத்திலிருந்து நம்முடைய கவனம் கலைந்து போகும்படி விட்டுவிட முடியாது.''

என்று நாட்டின் ஸ்திரத்தன்மை பற்றிய எச்சரிக்கையையும், அதில் தாங்கள் கொண்டிருக்கிற அக்கறை பற்றியும் எடுத்துக்காட்ட முன்வருகிறார். அதே வேளையில்—

> ''கருத்து வேறுபாடுகள் எதுவும் ஏற்பட்டால் நல்லெண்ணமும், பொதுப் பணிக்கு உழைக்கும் ஆர்வமும் இருக்கும்போது அவற்றில் ஒத்துப்போக முடியும்.''

என்று, மாநில—மத்திய அரசுகளின் கருத்து மோதல்கள் பற்றியும் தம் உள்ளார்வத்தைப் புலப்படுத்துகிறார்.

மத்திய—மாநில அரசுகளுக்கிடையே இன்று பல் வேறுபட்ட காரணங்களுக்காக கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அதுவும் மாற்றுக் கட்சிகள் பதவிப் பொறுப்பேற்றுள்ள மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் புதிய புதிய கோணங்களில் மோதல்கள் தொடங்கியுள்ளன.

சில, பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டியவை; பல விட்டுக் கொடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டியவை.

பொதுவாக மத்திய அரசினர், எந்த ஒரு விஷயத்தில் மக்களுக்கும் சரி, மாநில அரசுகளுக்கும் சரி, அறிவுரை கூற முன்வருகிறபோது — தாங்கள் எப்படி இருக்கிறோம்—தங்கள் நிலை என்ன என்பதனையே மறந்துதான் அறிவுரை கூறுகின்றனரே தவிர, நடப்பு நிலை பற்றி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவே மறுத்துவிடுகின்றனர். அதே வேளையில் அறிவுரைகள் மட்டும் டன் டன்னாக!

இந்தி மொழி விவகாரமும் பல்கலைக் கழக பயிற்று மொழி விவகாரமும் மட்டுமே போதுமானவை, இந்தியாவின் எதிர்காலத்தை உடைத்து உருக்குலைப்பதற்கு! வளர்ச்சித் திட்டங்களின் திருப்பு முனையையே வேறு திசைக்குத் திருப்பி விடுவதற்கு!

எனவே, நாட்டின் ஸ்திரத் தன்மை பற்றியும் கருத்து மோதல்கள் பற்றியும் கருத்தறிவித்துள்ள திரு, ஜாகிர் உசேன் அவர்கள், உண்மையிலேயே இந்தியத் துணைக்கண்டம் எதிர்காலத்தில் 'ஒரே நாடு' என்று இருக்கவேண்டும் என்பதில் அக்கறை யுடையவரானால் அந்த அக்கறையில்தான் தமது வானொலிப் பேச்சின் போது 'நாட்டின் ஸ்திரத் தன்மை' பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார் என்றால்—

ஆட்சேபணைக்குரிய கருத்துக்களைப் பொறுப்பிலுள்ளவர்கள், அதிகார ஆணவத்தோடும் சர்வாதிகார நெறி முறையிலும் வீசாமல் முதலில் தடுத்து நிறுத்த முயலவேண்டும்.

மொழி போன்ற விவகாரங்களைத் தள்ளிப் போட்டு —அவற்றை பெரும்பான்மை மக்களின் முடிவுக்குவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளச் செய்ய வேண்டும்.

மாநில அரசுகளின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிமடுத்துத் தீர்வுகளேற்படுத்திக் கொடுக்கச் செய்யவேண்டும்!

இவைகள் போன்ற முறையானவற்றில் உடனடி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளாமல் 'மோதல்கள்' பற்றியும், 'ஸ்திரத் தன்மை' பற்றியும் பேச வருகிறார் என்றால்—

எப்போதும்போல இதுவும் ஒரு—சடங்கு என்றுதான் ஆகிவிடும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

❀

## நிலாவின் தொலைவு

''பூமிக்கும் நிலாவுக்கும் இடையேயுள்ள தொலைவை இப்போது கிட்டத்தட்டச் சரியாக அளவிட முடியும்; தவறு இருந்தால் அது 50 அடிக்கும் குறைவாகவேதான் இருக்கும்! முன்பெல்லாம் ஒரு மைல் வரையில்கூட இருப்பதுண்டு.

புதிய தொலைவு அளவைத் திறன் காரணமாக, நிலாவை நோக்கி விண்வெளிக் கப்பல்களை எந்தெந்தப் பாதைகளில் அனுப்பலாம், எப்போது அனுப்பலாம் என்று இப்போதுள்ளதைவிட இன்னும் துல்லியமாகத் தீர்மானிக்க முடியும், குறிப்பிட்ட ஒரு காலத்தில் பூமியிலுள்ள ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து, நிலாவிலுள்ள ஒரு குறிப்பிட்ட இடம் எவ்வளவு தொலைவு என்று கணக்கிடுவதே புதிய முறை.

கலிஃபோர்னியா தொழில்நுட்பக் கழக ஜெட் உந்து விசை ஆய்வுக் கூடத்தைச் சேர்ந்த டாக்டர் ஜெ. டெரல் மல்ஹாலண்ட், வில்லியம் எல். ஜோக்ரன் ஆகிய இருவருமே புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளனர். வானியல் கணக்குவிவரங்களையும் விண்வெளிப் பிரயாணங்களின் விளைவாகத் தெரிய வந்த நிலாவின் நிறை பற்றிய புதிய விவரங்களையும் இணைத்து, அவர்கள் நிலாவின் தொலைவைக் கணக்கிடுகின்றனர்.

பூமிக்கும் நிலாவுக்கும் உள்ள தூரம் இரண்டரை லட்சம் மைல்கள். நிலா விண்ணில் வலம் வரும் பாதை சற்றே நீள் வட்ட வடிவமானதாக இருப்பதால், இந்தத் தொலைவு ஒரு மாதத்தில் 20,500 மைல் வரையில் மாறுபடுகிறது.''

# அண்ணாவின் அடிச்சுவட்டில்

## என்.வி.நடராசன். M.L.C.

'மனமிருந்தால் மார்க்கமுண்டு' என்பது வெறும் வார்த்தை சாலமல்ல. எந்தப் பிரச்சினையானாலும் தூய்மையுடனும் ஒருவர் கருத்தை மற்றவர் பரந்த நோக்கத்துடனும் சிந்தித்துச் செயல்பட்டால், எவ்வித சிக்கலும் இனிதே நிறைவேறும். அதற்குப் பதிலாக மனதில் தூய்மையின்றி காலமெலாம் பிரச்னைகளைப்பற்றி எத்தனை முறை கூடிப் பேசினாலும், விவாதித்தாலும் சாதாரண பிரச்சினைகளுக்குக்கூட தீர்வுகாண முடியாது.

இந்தியாவில்பல்வேறு இனமொழி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அது மட்டுமல்ல பல்வேறு கலாச்சாரம் நாகரிகம் ஆகியவைகளைக்கொண்ட மக்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். எனவே இந்திய மக்களை ஒரே நாகரீகத்தின்–அல்லது கலாச்சாரத்தின் அடிப்படையில் வாழ வேண்டும் என்று வலியுறுத்துவதோ உபதேசம் செய்வதோ வீண் வேலையாகும். அதுபோலவே இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றினை மட்டும் ஆட்சி மொழியாகத் திணித்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையாகும். தங்கள் தங்கள் மொழி ஒவ்வொருவருக்கும் உயிரினும் மேம்பட்டதாகும். அவ்வாறிருக்க இந்தியாவில் இந்திய மொழி எதுவானாலும் பிற மொழிகள் மீது ஆதிக்கம் செலுத்த முற்படுவதால் இந்தியாவின் ஒன்றுபட்ட தன்மையும், ஒருமைப்பாடும் சிதறுண்டு போகும் என்பது நடைமுறையிலே நாம் கண்டுவரும் உண்மையாகும். ஆனால் இந்த உண்மையை மிகத் துணிச்சலாக இந்திய அரசு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இவ்வாறு மறுப்பது இந்திய ஒற்றுமைக்குச் செய்யும் இடர்ப்பாடு என்பதை இன்றைய நிலையில்கூட உணர்ந்து மதித்து நடக்கவில்லை.

இரண்டாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் சிங்கப்பூர் சீமையை ஆளும் அந்நாட்டு ஆட்சிபீடத்தினர் மொழிச் சிக்கலில் மக்கள் ஈடுபட்டால் நாட்டின் அமைதியையே நாசமாக்கிவிடும் என்பதையும், மற்ற எல்லாப் பிரச்சினைகளைவிட இது மிகப் பெரும் பிரச்சினை என்பதையும் இதயபூர்வமாக உணர்ந்து தமிழ்—சீனம்—மலேயா– ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்கியுள்ளனர்.

சிங்கப்பூர் பாராளுமன்றத்திற்கு வருகை தரும் பார்வையாளர்கள் அமரும் இடத்தில் ஒவ்வொரு பார்வையாளரும் தங்களுக்கு உரித்தான மொழியில் பாராளுமன்ற விவாதங்களைக் கேட்கும் வகையில் 4 பொத்தான்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சீனத்தில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, பார்வையாளர் அதைத் தமிழில் கேட்க வேண்டும் என்று விரும்பி, பார்வையாளர் தமிழுக்கான பொத்தானை அழுத்தினால் உடனடியாகத் தமிழ் மொழி பெயர்ப்புக் கிடைக்கிறது. ஒரு உறுப்பினர் தமிழில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது பார்வையாளர், சீன மொழியில் கேட்க வேண்டுமென்று விரும்பி சீன மொழிக்கான பொத்தானை அழுத்தினால் உடனடியாகச் சீன மொழியில் பேச்சு மொழி பெயர்த்துத் தரப்படுகிறது. இது போன்று நான்கு மொழிகளும் பார்வையாளர்கள் தங்கள் விருப்பப்படி கேட்கும் வசதி அங்கே! ஆம்— அயல் நாட்டில் நம் தமிழ் மொழி ஆட்சி மொழிகளில் ஒன்றாக அரியாசனம் ஏறியிருக்கிறது.

இந்த விளக்கங்களை எல்லாம் சிங்கப்பூர் பாராளுமன்றத் தலைவரும், சிங்கப்பூர் கலாச்சாரத்துறை அமைச்சரும் நானும்—நண்பர் தங்கவேலரும் மலேயா சிங்கப்பூர் சுற்றுப்பயணம் செய்தபோது சிங்கப்பூர் பாராளுமன்றத் தலைவரின் அலுவலகத்திலும் — சிங்கப்பூர் கலாச்சாரத் துறை அமைச்சர் அலுவலகத்திலும் எங்களை வரவேற்று அவர்கள் எடுத்துக் கூறியும் நேரில் காண்பித்தும் அளவளாவியபோது நான்கொண்ட பெருமிதத்திற்கு அளவேயில்லை.

1967 ஜூன் திங்கள் 24-ம் நாள் காலை சிங்கப்பூர் சர்க்கார் மாளிகையில் சிங்கப்பூர் கலாச்சாரத்துறை அமைச்சரிடம் கலந்துரையாடிக் கொண்டிருந்தேன். மொழிச் சிக்கலால் நாட்டின் முன்னேற்றமும் மக்களிடையே வளரவேண்டிய ஒற்றுமையும் எவ்வளவுபாதிக்கப்படுகிறது என்பதையெல்லாம் உணர்ந்துதான் சிங்கப்பூரில் தமிழ்–சீனம்–மலேயா– ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக மனமுவந்து ஆக்கியிருக்கிறோம் என்று தட்டுத்தடங்கலின்றி கூறினார்.

இங்கே—இந்திய அரசுபீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு மொழிச் சிக்கலின் பேராபத்து தெரிந்தபோதிலும், அதை உணர்ந்து மதித்து— செயல்படும் மனவளம் ஏற்படவில்லை. கவைக்குதவாத உபதேசங்களைச் செய்யும் விசித்திரப் பிறவிகளாகக் காட்சியளிக்கின்றனர்!

* * *

மலேயா வாழ் மக்கள் தங்கள் வாழ்நாளில் இதுவரை இரண்டே முறைதான் வெள்ளம்போல் மக்கள் கூட்டத்தையும் கூட்டத்தினரின் ஆர்வத்தையும் கண்டார்கள். முதலாவதாக பண்டித சவகர்லால்நேரு அவர்கள் மலேயா வருகையின் போது ஈப்போ நகரசபையின் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது, அந்த வரவேற்புக் கூட்டத்தை நகரசபைக் கட்டிடத்தில் நடத்தாமல் பெருந்திறந்தவெளியில் நடத்தப்பட்டது. அதுபோது வெள்ளம்போல் மக்கள் திரண்டனர். அடுத்தபடியாக அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு

முன்னர் மலேயா சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு ஈப்போ நகருக்கு வருகை தந்தபோது, நகராட்சி சார்பில் ஸ்டேடியத்தில் வரவேற்பு விழா நடத்தினோம். சவகர்லால் நேரு அவர்களுக்குத் திரண்டிருந்ததைவிட பெருங்கூட்டமாக மக்கள் திரண்டிருந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர் — என்று ஈப்போ நகரசபைத் தலைவரும் மலேயா பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான சீனிவாசம் அவர்கள் எங்களுக்கு ஈப்போ நகரசபையில் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் எடுத்துக்கூறியபோது மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம். நமது வழிகாட்டியும், ஏன், திசைத் தடுமாறி நிற்கும் இந்தியமக்களுக்கே வருங்காலத்தில் வழிகாட்டியாக விளங்கப்போகும் நமது அருமை அண்ணா அவர்கள் மலேயா வாழ் மக்களின் இதயத்தில் பெருமைக்குரிய வகையில் இடம் பெற்றிருப்பது கண்டு பெருமிதம் கொண்டேன்.

* * *

பரா மாநிலம் (பினாங்கு) முதலமைச்சர் அவர்களை சர்க்கார் அலுவலகத்தில் நானும் நண்பர் தங்கவேலர் அவர்களும் சந்தித்துக் கலந்துரையாடும் வாய்ப்பினைப் பெற்றோம். எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தது மட்டுமல்லாமல் இந்தியாவின் தற்கால நிலைமையைப் பற்றியும் குறிப்பாக உணவு நெருக்கடி, விலைவாசி ஏற்றம், அயல் நாட்டு விவகாரங்கள் ஆகியவைகளையெல்லாம் கேட்டார்கள். தக்க பதில்களைத் தந்தோம். அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் பண்பையும், ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தையும் விரிவாகப் பாராட்டினார். அந்தத் திட்டம் வெற்றியுற தனது வாழ்த்தினைக் கூறுவதாகவும் அறிவித்தார்.

பீகாரில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியும் விரைவில் தீரவேண்டுமென்றும் இந்தியா சனநாயக வழி செய்து வெற்றியடைய வேண்டுமென்றும் இதயபூர்வமாகக் கூறியது எனது உள்ளத்தைத் தொட்டது என்று கூறினால் மிகையாகாது.

நம் தமிழக அரசு பஸ் கட்டணத்தைக்குறைத்திருப்பதையும்முக்கியத் தொழில்கள் தேசிய மயமாக்கப்படுவது பற்றியும் விவாதித்தார். இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் நிலையான அரசினை—அதாவது ஒரே கட்சி ஆட்சி செலுத்தும் வாய்ப்பினை மக்கள் தந்துள்ளனர். எனவே தமிழ் நாடு இந்திய ஒற்றுமைக்கும்—சனநாயக வளர்ச்சிக்கும் முன்னோடியாக விளங்கிவர வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

அதுபோன்றே மலேயாவிலுள்ள மற்றும் சில மாநிலங்களில் அமைச்சர் பெருமக்களும் பாராளு மன்ற—சட்ட மன்ற உறுப்பினர்களும், அகில மலேயா காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவர்களும் நாங்கள் கலந்துகொண்ட கூட்டங்களில் பங்கேற்று அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இயங்கிவரும் தமிழக அரசின் சீரிய பணியினையும் பிறவற்றையும் வெளிப்படையாகப் பாராட்டிப் பேசியதைக் கேட்ட எங்களுக்கு சிங்கப்பூர் — மலேயா சுற்றுப் பயணம் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்தது!

* * *

பொதுவாக மலேயா—சிங்கப்பூர் வாழ் மக்கள் வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் தத்துவத்தை உணர்ந்து தங்களின் அன்றாட வாழ்க்கையை நடத்திவருகின்றனர். நடைபாதைகளைக் கடப்பதிலிருந்து எல்லாவற்றிலும் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடித்து வருவது மிக மிக பாராட்டத்தக்கதாகும்.

மலேயா — சிங்கப்பூர் நாடுகளிலுள்ள தொழிற் சங்கங்கள்—அதன் தலைவர்கள் எங்களுக்கு அளித்த அன்பு உபசரிப்பும் என்றும் மறக்க முடியாததாகும். அதைவிட அந்த இருநாடுகளிலுமுள்ள ‘தொழிற் சங்கங்கள்’ இயங்கும்முறை என்னை மிக மிகக் கவர்ந்தது. கோலாலம்பூரிலுள்ள தோட்டத் தொழிலாளர் சங்கம் போக்குவரத்து தொழிலாளர் சங்கம் சிங்கப்பூரிலுள்ள துறைமுகத் தொழிலாளர் சங்கம் ஆகியவைகளில் திட்டமிட்டுச் செயலாற்றும் தொழிற் சங்கப் பணி இந்திய தொழிற் சங்க வாதிகளுக்கு ஓர் எடுத்துக் காட்டு என்றே கூறுவேன்.

மலேயா நாட்டில் ரப்பர் தோட்டங்களை கூட்டுறவுக் கொள்கை அடிப்படையில் தொழிலாளர்களுக்கே உரிமையாக்கி வரும் திட்டம் பெரிதும் பாராட்டுக்குரியதாய் அமையப் பெற்றுள்ளது.

* * *

சாதாரணத் தொழிலாளியாயினும் நண்பர்களை வரவேற்க ஒரு தனி இடம் ரேடியோ, உள்ளிட்ட வசதிகளுடன் முறைப்படி வாழ்கிறார்கள்.

மேலைய நாட்டு நாகரிகம் மலிந்துள்ள மலேசியா—சிங்கப்பூர் நாடுகளில் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தங்களின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் ஆகியவைகளிலிருந்து வழுவாமல் வாழ்ந்து வருவது மிகவும் பெருமைப் பட வேண்டியதாகும்.

மலேயா — சிங்கப்பூர் நாடுகளில் தேடித் தேடிப் பார்த்தோம்! பல நண்பர்களையும் கேட்டோம்! பிச்சைக்காரர்களை அங்கு காண முடியவில்லை. இங்கு பிச்சைக்காரர்கள் எங்கேதான் இருப்பார்கள் என்று கேட்டேன், அதற்கு சீன நண்பர் ஒருவர் கூறினார். ‘இது என்ன விந்தையாயிருக்கிறது. இந்தியாவிலிருந்து வரும் தலைவர்கள் இந்த நாட்டில் பிச்சைக்காரர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று கேட்பதை ஒரு பழக்கமாகக் கொண்டிருக்கிறார்களே! என்ன காரணம் என்று புரியவில்லை என்று ஆச்சரியத்தோடு கேட்டார்; என்னால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

மலேசியா மக்கள் அந்நாட்டின் பிரதமர் மாண்புமிகு துங்கு அப்துர் ரகிமான் அவர்களை தங்களின் மாபெருந் தலைவராகப் போற்றுகிறார்கள். அவ்வளவு சிறந்த சனநாயகவாதியாக அவர் விளங்கிவருகிறார். ஒவ்வொருவர் இல்லத்திலும் அவரது உருவப்படம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மக்களிடம் நெருங்கிப் பழகும் பண்பாளராகவும் எளிய வாழ்க்கை முறையை மேற்கொண்டும் மக்கள் தலைவராகவும் ஆட்சி புரிந்து வருகிறார்.

மலேசியா — சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்கள் இல்லத்திலும் மற்றும் பொதுவாக அரசியல் — சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளில் அக்கறையுடையவர்களின் இல்லங்களிலும் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படங்களும் பெரியார் அவர்களின் உருவப்படங்களும், அலங்கரிக்கப்பட்டுள்ளதைக்கண்டு பூரிப்படைந்தார்.

அந்நாட்டில்சீர்திருத்தக்கருத்துக்களை மக்கள் ஆர்வத்தோடு கேட்பது மட்டுமல்லாமல் நடைமுறையிலும் கடைபிடித்து வருவது பெருமைக்குரியதாகும்,

சிங்கப்பூர் துறைமுகத்தில் மட்டும் ஏறத்தாழ பத்தாயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு சிங்கப்பூர் அரசாங்கத்தினர் மதியம் உணவை இலவசமாகஅளிக்கிறார்கள். உணவு

(9-ம் பக்கம் பார்க்க)

# அரிசி விளையாட்டு?

அன்புள்ள நண்பா!

குயில் கூவித் துயில் எழுப்புவதற்கும், கோட்டான் கூவித் துயில் கெடுப்பதற்கும் உள்ள வேறுபாட்டினை உன்னால் புரிந்து கொள்ள முடியும்!

துயில் எழுப்பி எழுவதற்கும் துயில் கெட்டு எழுவதற்கும் வேறுபாடு உண்டு இல்லையா! அதுதான் அது.

அதிகாலையில் குயில் கூவக்கூடும்; உறக்கம் கலைந்து ஒருவன் எழுதல் இயலும். ஆனால் கோட்டான்? நள்ளிரவிலே அல்லவா அலறுகிறது? நள்ளிரவு நேரத்தில் உழைத்துக் களைத்த ஒருவனது உறக்கம் எப்படிப் பட்டதாயிருக்கும்? அந்த உறக்கம் கெடுக்கப்பட்டு, அவன் விழித்துக்கொள்ள நேர்ந்தால், அவனது மனநிலை எப்படி இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளேன்!

இதுதான் நண்பா, குயில் கூவித் துயில் எழுப்புவதற்கும், கோட்டான் கூவித் துயில் கெடுப்பதற்கும் உள்ள வேறுபாடு.

நண்பா! குயில் கூவித் துயிலெழுப்புவதனை உன்னாலும் என்னாலும் புரிந்து கொள்ளமுடியும். ஆனால் இந்தியத் துணைக் கண்டது மக்களை கோட்டான்கள் கூவி அமைதி உறக்கத்தைக் கெடுக்கத் தொடங்கி இருப்பதனைத்தான் யாராலுமே புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆமாம் நண்பா! குயில் கூவுகிறதே என்று கோட்டானும் குரல் கொடுத்துப் பார்க்கிறது! முன்னதால் துயில் எழ முடிகிறது! பின்னதால் துயில் கெடுகிறது!!

இந்தியத் துணைக் கண்டத்து ஜனநாயக உணர்வு மங்கி துயின்று கொண்டிருந்த பல மாநிலங்களை 1967ல் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் ஜனநாயக விழுச்சி எனும் குயில் கூவி, அவர்தம் துயில் எழுப்பிவிட்டது. அதனால் அங்கெல்லாம் எதிர்க்கட்சிகளின் ஆட்சி அமையவும் பெற்றது.

நண்பா! அது பொருத கோட்டான்கள் சில, சில மாநிலங்களில் தங்களாலும் கூவ முடியும் என்று கூவுகின்றன. அதனால் உறக்கம் அல்லவா கெடுகிறது! உழைத்துக் களைத்து அலுத்தல்லவா அவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்! தின்றுக் கொழுத்த போதையில் கூட அல்லவே! அவனது உறக்கத்தையல்லவா கோட்டான்கள் கெடுக்கின்றன!

தென்னாட்டுக்கு மட்டும் வா, நண்பா! அதிலும் சிறப்பாகக் கேரளத்தைப்பார்! இரண்டு, மூன்று திங்களாகவே அங்கே என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது!

கேரள மக்களது அமைதி அங்கே நாளுக்கு நாள் வேளைக்குவேளை என்ற ரீதியில் கெடுக்கப்படுகிறது! ஊன்றிக் கவனித்தால் திட்டமிட்டுக் கெடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

அமைச்சர்களின் கார்கள் அங்கே தாக்கப்படுகின்றன. கொடும்பாவிகள் கட்டிச் சுட்டெரிக்கிறார்கள்; அதிகாரிகள் 'கேரோ' செய்யப்படுகின்றனர். மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல் வன்முறைச் செயல்களிலிறங்கி, சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்து வருகிறார்கள்! மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல் தடுக்கப்பட்டு, அவர்களையே வன்முறைச் செயல்களுக்குத் திருப்பிவிடுவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வளவும் எதனால்?

அங்கே பெரும்பான்மை இடதுசாரி கம்யூனிஸ்டுகள், பிற எதிர்க்கட்சிகளின் துணையோடு ஆட்சி அமைத்திருக்கிறார்கள்! அதனால்!

புதுச்சேரியில் சட்டமன்ற உறுப்பினர்களை அணுக முடிந்தது! கேரளாவில் முடியவில்லை போலும்! அதனால்!!

நண்பா! கேரளா, அன்றிலிருந்து இன்றுவரை, உணவு விவகாரத்தில் தன்னிறைவுபெற முடியாத நிலையில் மட்டுமல்ல — இயன்றவரையிலாது உற்பத்திக்கு முயலுவோம்என்றநிலைமைக்கும்வராத பெரு குறைபாட்டுக்கு உரியதாகவே இருந்து வருகிறது.

நீர், நில வசதிகள் பற்பலவிருந்தும் அங்கே—இங்குள்ள சிலபேர் பணப்பயிர்தான் பயிரிடுவேன் என்ன செய்வாய்? என்று கேட்கிறார்கள் இல்லையா அதுபோல—ஸ்டர்லிங் நிதியம் ஏராளமாக ஈட்டித்தரும் ரப்பர் தொழிலில் தங்கள் நாட்டத்தை முழு அளவில் செலுத்துகிறார்கள். அந்த முழு அளவின் வன்மை, படி அரிசி 4-அல்லது 5-ரூபாய் வரையில் விலைகொடுத்துப் பெற்றுக்கொள்ளும் தன்மையையும் ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

நாலைந்து ரூபாய் விலைகொடுக்கத் தயாரிலிருந்தும் அவர்களுக்குப் போதிய உணவுத் தானியம் கிடைக்கவில்லை.

காய்கின்ற கும்பிக்குச் சொந்தக்காரர்களாய் இருப்போர், அது யாருடைய ஆட்சியாக இருந்தாலும், எத்தனை நாளைக்குத்தான் விட்டுவைப்பார்கள்!

ஆனால் நண்பா! கேரள விவகாரம் மட்டும் எந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும் அது ஒரு தனித் துவமிக்கதாகவே இருக்கிறது!

தன்னிறைவுக்கு முயற்சி மேற்கொள்ளாத கேரளா, தன் உணவுத்தேவைக்கு மத்திய அரசையும், அண்டை அயல் மாநிலங்களையும் நம்பியே இருக்கிறது!

நண்பா! கடந்த முறை இப்போதைய கேரள முதல்வர் நம்பூதிரிபாடின் ஆட்சிக்கு முடிவு கட்டியதற்குத் தொடக்கக் காரணமாயமைந்தது — பள்ளிப் பாடப் புத்தகம்!

ஆனால் நண்பா! இப்போது உணவுப் பிரச்னையை காரணமாக்கிக்கொள்ள அங்குள்ளோர் விரும்பிவிட்டார்கள் என்றே தெரிகிறது.

தமிழகத்தில் காங்கிரசின் சர்வாதிகார வெறித் தன்மை சாய்க்கப் பெற்று, ஜனநாயக உணர்வு விழித் தெழுந்து, செயல்படத் தொடங்கிய பின்னர்—நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்குக் கள்ளத்தனமாக உணவுப் பொருள் கடத்தப்பட்டுக் கொண்டிருந்த வாயில்கள் பெரும்பான்மையும் மூடப்பட்டன! 'என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே? என, ஏ. கே. கோபாலன் போன்றோர் அங்கலாய்த்துக் கொள்ளும் அளவுக்கு நிலைமையும் மாறியது.

நண்பா! அதே வேகத்தில் கேரள முதல்வர் டெல்லிக்குப் பறந்து சென்று பிரதமரையும் ஜகஜீவன்ராமையும் சந்தித்தார்! டெலிபோன் உரைகள் பறிமாறிக் கொள்ளப்பட்டன. முதல்வர் திரும்பினார்!

பிரச்னை முற்றுப்பெற்று விடவில்லை. நம்பூதிரிபாடு பதவிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்கு அப்புறம், அவர் மாநிலத்து பிற விவகாரங்களைக் கவனிப்பதற்குக் கூட அவகாசமற்ற முறையில்—உணவுப்பிரச்னை முக்கியக்கட்டத்தை எட்டியது அங்கே!

எங்கே பிணம் விழும்? என்று எதிரபார்த்துக் கொண்டிருக்கும் கழுகுக் குணம் கொண்ட காங்கிரஸ்—தன் துரித யந்திரத்தை முடுக்கியது!

அதன் விளைவு?

கார்கள் தாக்கப்படுகின்றன! பள்ளிகள் மூடிக் கிடக்கின்றன!! கேரோக்கள்! வன்முறைச் செயல்கள்! சட்டம், ஒழுங்கு அமைதியின் சீர்கேடு!!

நண்பா சென்ற முறை நம்பூதிரிபாடு அவர்கள் டெல்லி சென்று வந்தபோது உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்களிடம், மாதம் ஒன்றுக்கு 75,000 டன்கள் அரிசி வீதம் கேரளாவுக்கு அனுப்பப்படும் என்றும், அது அங்குள்ள மக்களுக்குத் தலா 6 அவுன்ஸ்கள் வீதம் வழங்குவதற்குப் போதுமானது என்றும் வாக்குறுதி பெற்றுத் திரும்பினர்!

**முகப்பில்:**

**தென்னாற்காடு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்**

திரு. இரெ. இளம்வழுதி (கடலூர்)
,, பாலகிருஷ்ணன் (வானூர்)
,, எஸ். பி. பச்சையப்பன் (சங்கராபுரம்)

உனக்குதான் தெரியுமே! காங்கிரசாரின் வாக்குறுதிக்கு எவ்வளவு 'வலிவு' உண்டென்று! அதிலும் சிறப்பாக மத்திய அரசின் வாக்குறுதிக்கு எவ்வளவு 'சீரும் சிறப்பும்' உண்டென்று!

அதுபோலத்தான் நண்பா! 75 000 டன் அரிசி அனுப்பப்படும் என்று ஜூலைத் திங்களில் பெற்றுவந்த வாக்குறுதிக்கு மாறாக, அத்திங்களுக்கு 45,000 டன்கள் மட்டுமே அனுப்பப்பட முடியும் என்றும் கூறப்பட்டது. அதிலே 29,000 டன்கள் மட்டுமே அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

நண்பா! இப்போது புதியவாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள்! 33 000 டன்கள் மட்டுமே ஆகஸ்டு திங்களுக்காகக் கொடுக்கப்படும் என்று? நண்பா! இடைப்பட்ட நாட்களுக் குரிய வாக்குறுதிக் கோட்டா? அது ஆண்டவன் ஒருவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் என்று, நம் 'ஹோம் ரூல்' எழுதுகிறது!

33 000 டன்கள் மட்டுமே என்றால் நண்பா, அது தலா 3 அவுன்சுகளே வழங்கப்பட போதுமானதாகும்! ஆள் ஒன்றுக்கு! நாள் ஒன்றுக்கு!

மக்களுக்கு—அவர்கள் வயிறு காய்ந்துவிடாமல் காப்பாற்றித் தருகிறோம் என்ற 'வாக்குறுதி' அடிப்படையில், மாநிலத்து வளம் வருவாய் அனைத்தையும் சுரண்டிச் செல்கிற மத்திய அரசின் இத்தகைய விசித்திரப் போக்கு—

கோட்டான்களுக்கு வாய்ப்பாகி விட்டிருக்கிறது அங்கே! இனி கேரள காங்கிரஸ் கோட்டான்கள் தீவிரமாக உணவு இயக்கத்தில்' ஈடுபடப் போகின்றனவாம்! சிறப்பாக மாணவர் முகாமை முடுக்குவிடப் போகின்றனவாம்!

மத்திய அரசுதான் இந்த எண்ணத்தைக் கேரள காங்கிரசாருக்கு விதைத்திருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. சான்றாக இருப்பவைதான் நண்பா அதன் அரிசி விளையாட்டு.

மத்திய அரசு, தான் வாக்களித்தபடி 75,000 டன் அரிசியையும் காலம் தவறாமல் மாதம் தவறாமல் சீராக அனுப்பிக்கொண்டிருக்குமானால்—கேரளா ஒழுங்காகத் தன் காரியங்களில் கவனம் செலுத்த முடியும்!

பதவியேற்ற நாள் முதல், அரிசி, அரிசி என்றே அலைந்துகொண்டிருக்கும் நிலைமையும் திரு, நம்பூதிரிபாடு அவர்களுக்கு ஏற்படாது!

கழுகுகளின் அலகுகள், தீட்டப்படத் தேவையுமிராது.

ஆனால் நண்பா! கேரளாவும் தன் தீவிர முயற்சியில்விவசாயஉற்பத்திக்குமுயல்வதாகவும்தெரியவில்லை! மத்திய அரசும் வாக்குறுதியைக்காப்பாற்றாது! அண்டை அயல் மாநிலங்களும், உதவி செய்யக்கூடிய நிலையில் இல்லை!

முடிவு எது நண்பா?

கேரளக் கழுகுகளுக்கு இரையாகிவிடுவது ஒன்று தானா?

இதுதான் முடிவு — என்றால் அது திரு. நம்பூதிரிபாடு அவர்களதுதிறமையை எடுத்துக்காட்டுவதாகவும் அமையாது; கேரள மக்களது கற்றறிந்த ஞானத்தைப் புலப்படுத்திக் காட்டுவதாகவும் இருக்காது.

திட்டமிட்டு உணவு நெருக்கடியை உண்டாக்குவதாகவே இருக்கும்! ஜனநாயக உணர்வின் சீர்குலைவாகவே இருக்கும்!

காடு, கரம்புகளைச் சீர்படுத்தி விளைநிலமாக்குதற்குத் தமிழகம் முயல்வதேபோல் திரு. நம்பூதிரிபாடும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்! உடனடியாக! உணவுத் துறையில் பெரும்பான்மையும் 'உதவி' மூலமே பெற்றுத் தீர்த்துக்கொள்ளவேண்டிய நிலைமையிலிருந்து கேரளா விடுபட்டாகவேண்டும், உடனேயே!

அத்தகைய நம்பிக்கையை அவர் கேரள மக்களுக்கு ஊட்டவேண்டும்! தம் திட்டங்கள், செயல்கள், நடவடிக்கைகள் மூலம்!

தேவையானால் ரப்பர் காடுகளை அழித்தாவது— அந்த இடத்தில் உணவு விளைவிக்கும் முயற்சிபற்றியும் சிந்திக்கவேண்டும்.

**எல்லாவற்றிற்கும் மேலாக, அண்டை அயல் மாநிலங்களுடன் ஒத்துப்போகும் இயல்பை அவர் துரிதமாகப் பெற்றாகவேண்டும்! ஆற்று நீர்ப் பங்கீடு போன்ற விவகாரங்களில், விட்டுக் கொடுத்தாவது நாட்டு நலம் பேணவேண்டும்.**

**இல்லையென்றால், காங்கிரசாரையும் முந்திக் கொண்டு தம்கட்சிக்காரர்கள் சிலரே குழப்பத்தை மூட்டி, தம் பெயரை நிலைநாட்டிக்கொள்ள முன் வருவதேபோல, தனக்குத்தானே பலியாக்கிக் கொள்ள நேரும்—நிச்சயம் நேரும்!**

பலாத்காரம் தலையெடுக்கிறது என்றகாரணத்தை காட்டி, கடும் நடவடிக்கைகள் எடுப்பேன் என்று கூறுவது மட்டும், கேரள மக்களது உணவுப் பிரச்னையைத் தீர்த்துவிடப்போவதில்லை.

ஒரு பக்கம் நடவடிக்கை — மறுபக்கம் ஆக்க ரீதியான செயல் திட்டம்! ரூபாயின் இருபக்கங்களைப்போல இருந்தாகவேண்டும்!

வெறும் வாய்ப் பேச்சுக்கள், வயிற்றை நிரப்பிவிடப் போதுமானவை அல்ல; செயல்கள் மூலம் அதனைச் செய்து காட்டவேண்டும்.

**இல்லையென்றால், ஒரு ஜனநாயகப் படுகொலைக்கு அவர் நிச்சயமாக ஆளாகியே தீர வேண்டிய நிர்ப்பந்த நிலையிலிருந்து மீள முடியாதவராவார்.**

ஜனநாயகத்தை சீர்குலைத்தனர் காங்கிரசாரும் மத்திய அரசினரும் என்று கூறவேண்டிய சூழ்நிலையை, திரு. நம்பூதிரிபாடு அவர்களே உண்டாக்கிக் கொடுத்தவராகிவிடுவார்!

எதிர்பார்ப்போம் நண்பா! கேரளாவின் அரிசி விளையாட்டில் இந்தியாவின் அமைதியும் உள்ளடங்கி இருக்கிறது! தமிழகத்தின் அமைதியும் அடங்கி இருக்கிறது! எதிர்பார்ப்போம்!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்.**

---

6- பக்கத் தொடர்ச்சி

தயாரிக்கப்படும் இடத்தைப் பார்வையிட்டேன். அடுப்பு உள்ளிட்ட அனைத்தும் மின்சார வகையின் மூலமே இயக்கப்படுகிறது. தொழிலாளர்களுடன் அமர்ந்து மதியம் உணவையும் சாப்பிட்டேன். நடுத்தரமான-அருமையான உணவு அந்த மதியம் உணவை, உணவு விடுதியில் சாப்பிட விரும்பாத தோழர்கள் தங்கள் இல்லத்திற்குக் கொண்டுபோய்க் குடும்பத்தினருடன் சாப்பிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் தமிழர்கள்—சீனர்கள்— மலேயர்கள் ஆங்கிலேயர் உள்ளிட்ட பல்வேறு இன்மொழி மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் சாதி—மத— குரோதங்களோ — விரோதங்களோ இல்லாமல் தோழமையுடன் வாழ்ந்து வருவது என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்தது.

மலேசியா—சிங்கப்பூர் நாடுகளில் வாழும் தமிழர்கள் அந்நாட்டுக்கு உரியவர்களாக, அந்நாட்டின் எல்லா முன்னேற்றத்திற்கும் தாய்மையான துணைபுரிபவர்களாக வாழ வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள், அவர்களது சுற்றுப் பயணத்தின்போது எடுத்துக்கூறிய தன்மை அந்நாட்டு மக்களின் உள்ளங்களில் நிலைத்து நிற்கிறது. அதைத் தொடர்ந்தே அக்கருத்தை நானும் நண்பர் தங்கவேலரும் வலியுறுத்திக் கூறிவந்தோம்.

சுருங்கக்கூறின் மலேயா—சிங்கப்பூரை விட்டுப் புறப்பட எங்களுக்கு மனமேயில்லை. அந்த அளவுக்கு எல்லா தரப்பினரும் எங்களிடம் பேரன்பு செலுத்தினார்கள், அதைவிட மேலும் சிறப்பாக இந்தியாவின் நல்வாழ்வுபற்றியும் தமிழ்நாட்டில் மலர்ந்துள்ள நல்லாட்சி குறித்தும் நமது அண்ணா அவர்களின் அரசியல் பண்பாடுபற்றியும் பெரிதும் மதிப்பும் மரியாதையும் அன்பும் கொண்டிருப்பதேயாகும்.

நாங்கள் சிங்கப்பூரைவிட்டுத் தாயகம் திரும்பும்போது. அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி முதல் மாநாட்டினை மலேசியாவில் சிறப்புடன் நடத்திய கட்மை வீரர்களை அறிஞர் பெருமக்களே தமிழகத்தில் தமிழக அரசின் துணைகொண்டும் தமிழ்ப்பெரு மக்களின் ஆதரவு கொண்டும் நடைபெறவிருக்கும் அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தாருங்கள் தமிழகத்தில் மலர்ந்துள்ள மக்கள் ஆட்சியினையும் கண்டு களித்து வாழ்த்துத் தாருங்கள் என்று வேண்டிப் புறப்பட்டு, தாயகம் திரும்பினோம்.

எங்களுக்கு மலேசியாவிலும்—சிங்கப்பூரிலும் அளிக்கப்பட்ட வரவேற்புகள், ஆதரவுகள் அனைத்தும் எங்களுக்குள்ள சிறப்பு என்று கூறமாட்டேன். அச்சிறப்புகளனைத்தும் நமது அண்ணா அவர்களுக்கே உரித்தானதாகும். எனவே அச்சிறப்புகளை அறிஞர் அண்ணா அவர்களுக்குக் காணிக்கையாக்கி எங்களது சுற்றுப் பயணத்திற்குப் பேருக்கமும், பெருந்துணையும் புரிந்த அனைவருக்கும் என் சார்பிலும் தங்கவேலர் சார்பிலும் இதயபூர்வமான வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறேன்.

❁




## 3—15
## தாமரை நழுவியது

செந்தாமரை கேட்டதற்குப் பதில் சொல்லாமல் குலசேகரன் வாய் திறந்து சிரித்தான்.

'உம்மால் தரமுடியுமா, என் அத்தானை?' என்று திரும்பவும் அவனது முகத்தை உற்றுப் பார்த்தபடி, கலக்கத்தோடு வினவினாள்.

'தரமுடியும் செந்தாமரை! உன் அத்தானை என்னால் தர முடியும்! சோலையப்பன் இருக்கிறான் — உயிரோடு இருக்கிறான்!'

குலசேகரன் இவ்வாறு கூறியதைக் கேட்டதும், செந்தாமரையின் இதயத்தில் குபீரென்று நெருப்புப் பற்றி அணைந்தது. அந்தக் கன்னல் மொழியாளின் தோள்களும் கால்களும் சில்லிட்டன.

'உயிரோடு அத்தான் இருக்கிறார்!'

இந்த வார்த்தைகள் அந்த இன்பவல்லியின் மனத்தில், சிட்டுக் குருவியின் சிறகைப் போலப் படபடவென்று படித்துக்கொண்டன.

பற்றரையில் ஓடுவதைப் போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. காலடியிலிருந்த தரை, மாயமாய் நழுவி அங்கே ஒரு மலர் மேடை உயர்வதைப் போலவும்—அந்த மலர்மேட்டின்மீது நின்று பார்க்கையில், எங்கும் வானவில்லின் வண்ண விளையாட்டுக்கள் நடைபெறுவதைப் போலவும் — அவளது உணர்ச்சிக்கும் கண்ணிற்கும் ஒரு மயக்கம் ஏற்பட்டது.

'அத்தான்! அத்தான்!' என்று கண்களை மூடிக்கொண்டு முணுமுணுத்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு உணர்ச்சிகளின் கொக்கரிப்பு அடங்கியது. ஒருவித ஏமாற்றம் அவள் உள்ளத்தில் நிழலாடியது. திடுக்கிட்டுக் குலசேகரனைப் பார்த்தாள்.

'உயிரோடு இருக்கிறாரா என் அத்தான்? உங்கள் வார்த்தையை எப்படி நம்புவது?' என்று பீறிட்டு வரும் அழுகையை அடக்கிக் கொண்டே அவள் கேட்டாள்.

சோலையப்பன் கொல்லப்படவில்லை! அவனைக் கொன்று கல்லறையில் அடைக்கும் அளவிற்கு கொடுமைக்காரனாகவோ, நன்னனையும் ஆளவந்தாரையும் மறந்துவிட்ட வஞ்சகனாகவோ நான் மாறவில்லை! மாறும்படிச் செய்ய தூமகேது விழிகளை உருட்டினான்! 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு!' என்ற வள்ளுவன் வாக்கை மறந்துவிட்டு, விலங்குபோல் வாழ விரும்பாதவன் நான்! செந்தாமரை! சோலையப்பனை விசாரித்தது உண்மை! மரண தண்டனை தந்தது உண்மை! ஆனால் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை!'

'அவர் கல்லறை இருக்கிறதே!'

'கல்லறை இருக்கிறது!' சோலையப்பனின் கல்லறை அது என்று சொல்லவும்படுகிறது!'

வெற்று இடத்தில் கட்டப்பட்ட கல்லறையா அது?'

'இல்லை! அந்தக் கல்லறையினுள்ளே ஒரு பிணமும் இருக்கிறது! அந்தப் பிணத்தின் உதவியினால் தான், சோலையப்பனைத் தப்பும்படிச் செய்யவும்—சோலையப்பனைக் கொன்றுவிட்டது என்று தூமகேதுவை நம்பும்படிச் செய்யவும் முடிந்தது! சோலையப்பனைக் கொல்லாமல் விட்டால், தூமகேதுவின் ஆத்திரத்திற்கு ஆளாக நேரிடும்—அவனது ஆத்திரத்தைத் தாங்கும் அளவு, இன்று பாண்டிய நாடு இல்லை— என்ன செய்வது என்று நான் குழம்பிக்கொண்டிருந்த சமயத்தில், அனாதைப் பிணம் ஒன்று கிடப்பதாகச் செய்தி கிடைத்தது! அந்தப் பிணம் தான் சோலையப்பன் என்று கூறி, அவனைத் தப்பியோடும்படிச் செய்யலாம் என்ற வழி தோன்றியது! அவ்வாறே செய்தேன்!'

'என் அத்தானை நீங்கள் சாகடிக்கவில்லை!'

'இல்லை!'

'உயிரோடு இருக்கிறார்!'

'ஆமாம்!'

'எங்கே இருக்கிறார்?'

'சேர நாட்டில் இருக்கிறான்!'

'சேர நாட்டிலா?'

'ஆமாம்! இங்கே இருந்தால்' எப்படியாவது தூமகேதுவின் கழுகுக் கண்கள் அவனைக் கண்டு பிடித்துவிடுமே!'

'அப்படியானால் அத்தான் மறைந்து மறைந்துதான் வாழவேண்டுமா?' என்று திருமேனியின் முகத்தைப் பார்த்து, செந்தாமரை கேட்டாள்.

'சிறிது காலத்திற்கு அப்படி இருந்துவிட்டு — தூமகேதுவின் அட்டகாசங்கள் அடங்கியதும், பாண்டிய நாட்டிற்கு அவர் திரும்புவார்!' என்று திருமேனி கூறி, அவளது கண்ணீரைத் துடைத்தாள்.

'தூமகேதுவின் அட்டகாசங்களை அடக்க முடியுமா!'

'ஏன் முடியாது செந்தாமரை? அடக்கவேண்டும், இல்லாவிட்டால் நான் அரசைத் துறக்கவேண்டும்! அக்கிரமங்கள் புரிந்தவாறு அந்த ஆணவக்காரன் இருக்க, அதைப் பார்த்துக்கொண்டு இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் நான் மண் பொம்மையாக இருப்பது? ஏன் இருக்கவேண்டும்? என் விருப்பப்படி ஆள முடியவில்லை என்றால், எதற்காக மணிமுடி சிரசில் இருக்கவேண்டும்? ஏதோ ஒரு மயக்கத்தினால்—மகன்மீது கொண்ட பாசத்தினால்—எனக்குப் பின் ஆள அவனுக்கு நாடு இருக்கவேண்டுமே என்ற எண்ணத்தினால் — பொம்மை அரசனாகவும் இருக்க இசைந்தேன்! புத்தபுரத்தில் உலவிய நேரத்தில்தான்—அஞ்சலையையும் திருமேனியையும் கண்ட பிறகுதான் — சுதந்திரமாக ஆள வேண்டும் இல்லாவிட்டால் சுடுகாட்டில் பொன்னையாவின் கல்லறையின் பக்கத்தில் ஒரு இடத்தைத்

தேடிக்கொள்ள வேண்டும்—என்ற முடிவிற்கு வந்தேன்! அந்த முடிவை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்!' என்று குலசேகரன் சொல்லிவிட்டு, அங்கே இருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்தான்.

'என் அத்தான் உண்மையானவர்—உங்கள் நலத்திலேயே அக்கறை கொண்டவர்! அதை நிரூபிக்க நான் யார் என்பதை, இந்த நேரத்தில் தங்களுக்குச் சொன்னால் நல்லது என்று நம்புகிறேன்!'

'நீ யார் என்பதைச் சோலையப்பன் சொன்னான்!'

'ஆமாம் அரசே! வீரபாண்டியனின் தங்கை நான்? என் அண்ணனை ஆட்சிபீடத்தில் அமர்த்த வேண்டியே, ஆட்டக்காரியாக மதுரைக்கு வந்தேன்! தூமகேதுவின் ஒற்றர் குழுவில் சேர்ந்து—உமக்கு வேண்டியவர்களையெல்லாம் பிரித்து—தனி மனிதராக உம்மை ஆக்கி—பாண்டிய மண்டலத்தின்மீது என் அண்ணாவைப் பாயும்படி செய்யத் திட்டமிட்டேன்! ... நீங்கள் இலங்கைச் சிறையில் சிக்கியிருந்த சமயம் என் அண்ணா அரசராவார் என்ற நம்பிக்கையின் ஒளி தெரிந்தது! அதைப் பூரிப்போடு அத்தானிடம் தெரிவித்தேன்! சீறி எழுந்தார்! சிறுமதி கொண்டவளே என்று என்னை இழித்துப் பேசுவதைப் போலப் பார்த்தார்! 'நான் பிணமானாலும் ஆவேனே அன்றி குலசேகர பாண்டியனைத் தவிர, வேறொருவன் இந்தப் பாண்டிய நாட்டின் சிம்மாசனத்தில் அமர்வதைக் காணச்சகியேன்!' என்று ஆத்திரத்தோடு பேசினார். நான் கெஞ்சினேன், என் காதலுக்காக அவர் எதையும் செய்வார் என்று நம்பினேன். ஆனால் கடைசி வரைக்கும் என் அண்ணா அரசராவதை அவர் ஒத்துக்கொள்ளவே இல்லை! அத்தானின் நலத்தைவிட அண்ணாவின் நலம் பெரியதல்ல என்று எண்ணும் அளவிற்கு அன்பை அதிகமாக என் உள்ளத்தில் அவர் பொழிந்திருந்தார்! அத்தானின் உள்ளம் எப்படியோ அப்படியே நடந்துகொள்ளவேண்டும் என்ற முடிவிற்கு நான் வந்தேன்!...'

'செந்தாமரை! வீரபாண்டியன் மட்டுந்தானா உன் அண்ணன்! நானும்தான் உன் அண்ணன்! உன்னைக் கவலையடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்புள்ளவன்! முன்பொரு சமயம், என் மகனுக்கு, நன்னனின் மகளைத் தரும்படி கூறினேன்! அதன் மூலம் நன்னனின் குடும்பம்—அரச குடும்பத்தைப்போன்ற உயர்நிலையை அடையவேண்டும் என்ற என் ஆசையைத் தெரிவித்தேன்! என் சொல்லை நன்னன் நம்பவில்லை! உண்மையில் அப்படியே செய்து காட்ட வேண்டும் என்று அன்று முடிவுசெய்தேன்! என்னுடைய அந்த ஆசையை என் தங்கையான நீ நிறைவேற்றி வைத்துவிட்டாய்! செந்தாமரை......''

''அரசே......''

''இனிமேல் அப்படி அழைக்காதே செந்தாமரை! அண்ணா என்று அழை! இந்த உலகில் தனி மனிதனாக இருக்கும் எனக்கு, ஒரு தங்கை இருக்கிறாள் என்ற எண்ணம் தோன்றினால் — அந்த எண்ணத்தினால்—என் தோள்களின் வலிமை இன்னும் அதிகமாகும்! தம்பி ஒருவன் இருக்கிறான்—நம்மைப்போல் அவனும் வாழவேண்டும் — என்று பெருந்தன்மை என்னிடம் ஏற்பட்டுவிட்டது என்று கேள்விப்பட்டால் இந்தத் தூமகேது என்ன—அந்தச் சோழனே பயந்து தானே ஆக வேண்டும்......!''

''அரசே...!''

'இல்லை செந்தாமரை, இல்லை! உனக்கு நான் அரசன் அல்லன், அண்ணன்!''

'அண்ணா!''

'ஆமாம் செந்தாமரை—அப்படி நீ அழைப்பதைக் கேட்க என் அகம் குளிர்கிறது!...செந்தாமரை, முன்பு இருந்ததுபோலவே பாண்டிய மண்டலம் இரண்டாகவே இருக்கட்டும்—அதன் ஒரு பகுதிக்கு வீரபாண்டியன் அரசனாகட்டும்!''

'உண்மையாகவா அண்ணா?''

'ஆமாம் அம்மா எனக்காக உடன்பிறந்தவனையே நீ இழக்கத் துணியும்போது—நான் இந்த மண்ணைப் பிரித்துக்கொடுத்து என் நன்றியைக் காட்டிக்கொள்ளக் கூடாதா?'' என்று உறுதியோடும் உற்சாகத்தோடும் அவன் கூறியதைக் கேட்டதும் ஆச்சரியத்தால் செந்தாமரையின் நாக்கு அசைய மறுத்தன.

வீட்டிற்குச் சென்றதும், அந்த ஆச்சரியமான செய்தியைச் சிதாரியிடம் சொல்லிச் சொல்லி பூரித்ததோடு, அண்ணன் வீரபாண்டியனுக்கும் ஓலை அனுப்பினாள்,

வியப்பான செய்தியைச் செந்தாமரை தன் அண்ணனுக்கு அனுப்பியதைப்போலவே — வேறொரு வியப்பான செய்தியை இலங்கை மந்திரியார் நந்திநாயகம் திருமேனிக்கு அனுப்பியிருந்தார்-



'உங்களை அரசர் மன்னித்துவிட்டார்! குலசேகரபாண்டியனையே தங்களுக்கு மணம்முடித்து வைக்கவும் இசைந்துவிட்டார்! ஆகவே உடனே தாங்கள் இலங்கைக்குத் திரும்பி வரும்படி, அரசர் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்!'' என்று நந்திநாயகம் அந்த ஓலையில் எழுதியிருந்தார்.

உன் அண்ணனுக்குப் பாண்டிய மண்டலத்தில் பங்கு தருகிறேன் என்று குலசேகரன் சொன்னதும் செந்தாமரை எவ்வளவு ஆச்சரியம் அடைந்தாளோ—அதைவிட அதிக ஆச்சரியம் அடைந்தாள் திருமேனி, தந்தை தன்னை மன்னித்துவிட்டார் என்ற வரிகளை வாசித்ததும்!

''உன்னை எப்படியாவது இலங்கைக்கு வரவழைத்து, தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள, பராக்கிரமபாகு செய்யும் சூழ்ச்சியாக இருக்கும் இது!''

''இருக்காது, அத்தான்!''

''மகளைக் கொல்லத் துணியும் அளவிற்கு, கல்மனங்கொண்டவன்—இத்தகைய மனமாற்றத்தை எப்படிப் பெறமுடியும் கண்ணே''

'பெருத்த ஆச்சரியந்தான் அத்தான்!''

''ஆச்சரியம் ஒன்றுமில்லை திருமேனி, அந்த அயோக்கியன் சூதான திட்டம் தயாரித்திருக்கிறன் — ஆசை வார்த்தைகளால் உன்னை மயக்கி அங்கே வரவழைத்து, அதன் பிறகு பழிக்குப் பழி வாங்க! அதற்கு உடந்தை போலிருக்கிறது, அந்தத் தாடி நரைத்த நந்திநாயகம்!''

''மந்திரியாரைப்பற்றி தவருக ஒன்றும் சொல்லாதீர்கள் அத்தான்! அவர் உத்தமர்! புத்தபிரானே, அவர் உருவில் நடமாடுகிருரோ என்று பல சமயங்களில் நான் எண்ணுவதுண்டு! அத்தகைய உண்மையானவரும்– பெருந்தன்மையானவருமாவார் அவர்!''

'அவரிடத்தில் உனக்கு அவ்வளவு நம்பிக்கை இருப்பதினுல்தான், அவரைவிட்டு ஓலை எழுதச் சொல்லியிருக்கிறன், அந்த வஞ்சகன்!''

''தவருன வழியில் போகும்படி அவரைச் செய்ய, இந்த உலகில் யாராலுமே முடியாது!

'உன் தந்தைக்கு அவர் மந்திரியாக இருப்பதிலிருந்தே அது தெரிகிறது!'

'குறும்புக்காகத் தாங்கள் அப்படிக் கூறுவதுகூட, என் மனதை நோகச் செய்கிறது, அத்தான்! நந்திநாயகம் மாசு இல்லாத தங்கம்! மேலும் அவருக்கு என்மீது அதிக அன்பு!'

உன்மீது இரக்கம் பிறந்துவிட்டதாக நடித்து அவரையே ஏமாற்றியிருந்தால், உன் தந்தை?'

அப்படியெல்லாம் ஏமாந்துவிடுபவர் அல்லர் நந்திநாயகம்! அவரை ஏமாற்றி ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் அளவிற்கு, என் தந்தைக்குத் துணிவும் வராது! உண்மையிலேயே என் தந்தை மன மாற்றம் அடைந்திருக்கிருர்! நான் இலங்கைக்குச் சென்று வருகிறேன், அத்தான்!'

'அவசரப்படாதே திருமேனி' யோசித்தே எதையும் செய்ய வேண்டும்!

'நந்திநாயகம் அவர்களின் ஓலையே போதும் அத்தான்—நாம் யோசிக்கவேண்டிய அவசியமே இல்லை!'

குலசேகரனை நம்பும்படிச் செய்ய திருமேனிக்கு ஒரு வாரத்திற்கு மேலாயிற்று. அதன் பிறகுதான். அவளை இலங்கைக்கு அனுப்ப இசைந்தான்.

'இளவரசியாரே! பலமான வரவேற்பில் என்னை மறந்துவிடப் போகிறீர்கள்!' என்று பல்லக்கில் ஏறப்போன திருமேனியிடம்' குலசேகரன் குறும்போடு கூறினன்,

'இளவரசியாக இருப்பதிலோ—உபசரிப்பும் வரவேற்பும் பெறுவதிலோ — எனக்கு ஆசை கிடையாது என்பது தாங்கள் அறிந்ததுதானே, அத்தான்! வயலில் உழுதுவிட்டு மேட்டில் வந்து உட்காரும் தன் கணவனுக்குக் கூழ் ஊற்றும் ஒரு ஏழைப் பெண்ணுக்கு இருக்கும் சுதந்திரமும் மகிழ்ச்சியும்கூட, என் போன்ற இளவரசிகளுக்குக் கிடையாதே!'

அப்பொழுது நீ பேசாமல் ஒரு குடியானவனின் மகளாகிவிடேன்!

'ஏர் பிடிக்கத் தாங்கள் தயார் என்றல்—கூழ்க்குடம் கொண்டுவர நானும் தயார் அத்தான்!' என்று புன்னகையோடு அவள் பல்லக்கில் ஏறி உட்கார்ந்தாள்.

இலங்கையை அடைந்ததும், தன் தந்தை கண்களில் நீர் வழிய வரவேற்றதைக் கண்டு, குழந்தையைப் போலத் திருமேனி அழுதுவிட்டாள்.

---

# நேர்மையான ஆட்சி!

தமிழ்நாட்டில், தி. மு. கழக அரசாங்கம் கண்ணியமான முறையில் நடந்துகொள்கிறது;

நிர்வாக ரீதியில் காங்கிரசைவிட அவர்கள் சிறப்பாக எதுவும் செய்ததாக அதற்குள் சொல்லிவிட முடியாது;

ஆனல், அவர்கள் நேர்மையாக ஆட்சி நடத்துகிருர்கள்!

— அனுமந்தையா
மைசூர் முன்னுள் முதல்வர்

---

'திருமேனி குலசேகரன் நலமா?' என்று தழதழத்த குரலில் பாரக்கிரமபாகு கேட்டான்,

'ஆமாம் அப்பா, நலமாகத்தான் இருக்கிருர்!'

'என்மீது இன்னமும் ஆத்திரத்தோடு இருக்கிருனு?' என்று கூறியவாறு பராக்கிரமபாகு புத்தர் சிலை இருந்த அறையினுள் நுழைந்தான்.

'இல்லை அப்பா!' என்று கையிலிருந்த தாமரையை நுகர்ந்தபடி, தந்தையைப் பின் தொடர்ந்தாள்.

சிலையின் முன்பு உட்கார்ந்த பராக்கிரமபாகு, பீடத்தில் தலையைச் சாய்த்து, 'புத்தபிரானே, என்னை மன்னித்துவிடுங்கள்!' என்று கண்ணீர் வழியத் துக்கத்தோடு கூறினன்.

சிறிது நேரம் கழித்து எழுந்து நின்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மகளைப் பார்த்தான்.

'திருமேனி! ஏமாற்றப் பார்த்தாயே — இப்பொழுது சிக்கிக் கொண்டாயா?' என்று ஆத்திரத்தோடு கண்களை உருட்டிப்பார்த்துப் பார்த்துப் பேசுவதைக் கேட்டதும், அப்பா!' என்று திருமேனி அலறிவிட்டாள். அவள் கையிலிருந்த தாமரை மலர் நழுவித் தரையில் விழுந்தது.

[வளரும்]

# நாடு இந்திக்காரர்களின் உடைமையல்ல!

## எல்லா மாநிலத்தவர்க்கும் பொதுச் சொத்து !!

### ஐந்து மாநிலங்களின் மொழி

## அனைத்து மாநிலத்தையும் ஆள்வதா?

## இணை மொழித் திட்டம் "இந்தி மொழி"த் திட்டமே!

### பெருந் தலைவர்களே வழிகாட்டவேண்டும்.

புதிய கல்விக் கொள்கை என்பதன் பெயரால், இந்தி பேசாத ராஜ்யத்தின்மீது அம்மொழியை மறைமுகமாகத் திணிக்கும் திட்டம் ஒன்று டில்லியில் உருவாகியுள்ளது. அதை சுதந்திர தினத்தன்று கல்வி மந்திரி அறிவிக்கப்போகிறாராம். அதன் விவரங்களைப் பார்க்கையில், இந்த நாட்டுக்கு நல்ல எதிர்காலம் உண்டா, தேசமே ஒருறுப்பாக நிலைத்திருக்குமா, வேகமான வளர்ச்சிக்கு இனி வழியிருக்குமா என்ற கவலை சான்றோருக்கு ஏற்படத்தான் செய்யும்.

காலேஜ் படிப்பில் ஆங்கிலம் இன்னும் ஐந்து வருஷந்தான் போதனா மொழியாக இருக்கலாம்; அதற்குள் பிராந்திய பாஷையில் போதனைக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்பது யூனியன் மந்திரிசபை செய்துள்ள முதல் முடிவு என்று கூறப்படுகிறது. தொழில்முறைக் காலேஜுகளிலும் இதே கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்பது இரண்டாவது முடிவு. மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் நடைபெறும் சாதாரண காலேஜுகளிலும் தொழில்முறை காலேஜுகளிலும் அவை தேசத்தின் எப்பகுதியில் இயங்கினாலும், போதனை இந்தியில் தான் நடைபெறும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். "போதனா மொழியாக ஆங்கிலம் நீடிப்பதை நாங்கள் விரும்பவில்லை'' என்று புதிய கொள்கைக்குக் "காரணம்' கூறியிருக்கிறார் யூனியன் கல்வி மந்திரி. எனவே நிலைமையின் தேவைக்கு மதிப்புத் தராமல், விருப்பு—வெறுப்பு அடிப்படையில், இந்திக்காரர்கள் மொழி விஷயத்தில் முடிவு கட்டப் பார்க்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இரண்டு அடிப்படைப் பிரச்னைகள் எழுகின்றன. மொழி பற்றிய முடிவுகள் எல்லாமே இப்பொழுது இருந்துவரும் நிலவரத்துக்கு அடியோடு சம்பந்தமில்லாதவை. இப்பொழுது ஒரு சில இடங்களில் ஒரு சில பாடங்கள் தவிர, பொது

> ஆகஸ்டுத் திங்கள் 12-ம் நாள் வெள்ளிக்கிழமையன்று தினசரி ஏடான 'தினமணி' வெளியிட்ட தலையங்கம்தான் இது. கல்லூரிகளில் வட்டார மொழி என்பதன் மூலம் இந்தி எப்படி நுழையப்போகிறது என்பதற்கான ஒரு படப்பிடிப்பு. ஆழ்ந்து சிந்தித்து-ஆனால் அவசரமாக ஒரு முடிவுக்கு வரவேண்டிய ஒரு விவகாரம்!

காலேஜுகளிலும் தொழில்முறைக் காலேஜுகளிலும் போதனை ஆங்கிலத்தில்தான் நடந்து வருகிறது. பிராந்திய மொழி அல்லது இந்தியில் போதனை அளிப்பதற்கு ஐந்து வருஷமல்ல, பத்து வருஷங்கூடப் போதாது. இதற்குக் காலவரம்பே கட்ட முடியாது. அறிவியல்துறைப் படிப்பு சம்பந்தபட்டவரை, வெளியுலகின் வளர்ச்சிக்கு இசைவாக நம் நாட்டில் ஏற்றம் கண்டாக வேண்டும். அது சரிவர நடைபெற வேண்டுமாயின் நெடுநாளைக்கு ஆங்கிலத்தின் போதனை நிச்சயமாக தேவை. அதை துணை நூல்களைப் படிப்பதற்கு வேண்டிய 'புத்தகாலய மொழி'யாகத் தாழ்த்த விரும்புகிறார் கல்வி மந்திரி. இது கல்வித் துறைக்கே பெருங்கேடு என்பதில் சந்தேகமில்லை.

பிராந்திய மொழிகளிலும், இந்தியிலும் இஷ்டப்படுவோர், காலேஜ் படிப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகளைப் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே போவதுதான் அறிவுடைமையாகும். அப்பொழுது தான் நல்ல தகுதியுடன் கூடிய உயர் கல்வியை இந்திய பாஷைகளில்பெற இயலும். ஆங்கிலத்தில் போதனை பெறுவதற்கான வாய்ப்பு வசதிகள், தேவையுள்ளவரை, படிக்க விரும்புவோரின் இஷ்டத்துக்கு ஏற்ப தொடர்ந்து நீடிக்கத் தான் வேண்டும். அதற்கு இடமில்லாமற் செய்யும் எந்த ஏற்பாடும் தேச விரோதத் திட்டம் என்று தான் மதிக்கப்பெறும்.

மந்திரக்கோலை அசைத்து, ஐந்து வருஷத்தில் போதனாமொழி அடியோடு மாறும் அற்புதத்தை நிகழ்த்திவிடலாம் என்று சொல்வதைப் போன்ற புரட்டுப் பேச்சு இருக்கமுடியாது. உயர்கல்வி தரமானதாக நிலைமையின் தேவைக்கு ஏற்ப அமைந்து தேசம் ஒருறுப்பாக இருந்துகொண்டு நல்லபடி முன்னேற வேண்டும் என்று விரும்புகிற ஒரு மந்திரிசபை இப்படி ஒரு சர்வநாசத் திட்டத்தைக் கொண்டுவரலாகாது. தேச அபிவிருத்தியையும், மக்களின் இடையறாத முன்னேற்றத்தையும்விட, ஆங்கிலத்தை கல்வித் துறையிலிருந்து விரைவில் விரட்டி

யடித்து விடுவதுதான் நோக்கமென்பது தெளிவாகிவிட்டது.

'இந்தி அபிமானிகள்' எனப்படுவோரின் போதனுமொழித் திட்டம் அவர்கள் விரும்பும் வகையில் உருப்பெறுமாயின். விரைவில் இந்தி ஒன்றையே ஆட்சி மொழியாகவும், போகப்போக இந்தியா வெங்கும் காலேஜ் படிப்பின் போதனு மொழியாகவுங்கூட இந்தி பேசாதவர்கள் ஏற்றுக்கொண்டாகவேண்டிய நிர்ப்பந்த நிலைமை வந்துவிடும். இது வெறும் கற்பனை அல்ல. வீண்காபுரா அல்ல. அப்படி நடக்கவேண்டும் என்று திட்டமிட்டு இந்திக்காரர்கள் வேலை செய்கிருர்கள். அவர்களுடைய செல்வாக்கிற்கு பயந்துபோய், புதுக்கொள்கை உருவாக்கியிருப்பதைப் பார்த்தால், பிரதம மந்திரிக்குக்கூட தடுமாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. கல்வித் துறையினரும், மாணவர்களும் ஆங்கிலத்தில் போதனையையே விரும்புவதாக பிரதமமந்திரி, பார்லிமெண்ட் மெம்பர் ஸ்ரீ அந்தோனியிடம் ஒப்புக்கொண்டார். ஆனுல் இந்தியே ஏக ஆட்சி மொழியாக வரவேண்டுமென்பது கொள்கையாகையால், ஆங்கிலத்தில் கல்வி போதனையை எடுத்துவிட வேண்டி ஏற்படுவதாக பிரதமர் சொன்னுராம். இது. ஆங்கிலம்தொடர்ந்து ஆட்சிமொழியாகப் பயன்படுவதைப் பற்றி நேருஜி அளித்த வாக்குறுதிக்கு முற்றிலும் மாறுபட்டது. கல்வித் துறையில் ஆங்கிலத்தை அழிப்பது, ஆட்சித் துறையில் இந்தியைத் திணிப்பதற்குத்தான் என்பது இப்பொழுது சந்தேகமறப் புலனுகிவிட்டது. இது தேசமெங்கும் பரவலாக ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் தோற்றுவிக்கவல்லது.

ஆட்சிமொழியை எடுத்துக்கொள்வோம்; ஆட்சி மொழிக்கு ஒரு கொள்கை போதனை மொழிக்கு ஒரு கொள்கை என்ற நிலவரம் ஒரே சமயத்தில் தொடர்ந்து அமுல் நடப்பது சாத்தியமல்ல. இப்பொழுது தேசமெங்கும் அகில இந்திய ஆட்சி மொழியாக இருந்துவருவது ஆங்கிலம். அதுவே பிரதான போதனு மொழியாகவும் இருந்து வருகிறது. ஆட்சிமொழி அந்தஸ்தை இந்திக்கும் அளிப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன அவை ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்றன. இந்தி படிப்படியாகத்தான், எல்லா ராஜ்யங்களின் இணக்கத்துடன் கூட, ஆட்சித் துறையில் ஏற்றம் காண இயலும். அதற்கு முயலுகையில், இந்தி ராஜ்யத்தவர் அகில இந்திய துறைகளில் ஆதிக்கம் செலுத்தி, பிற மொழியினர் பின் தங்கிவிடும்படி நேரிட்டுவிடலாகாது என்பதற்காகத்தான், ஆட்சிமொழிக் கொள்கையை உருவாக்கி அமுல் நடத்துவதில் நிதானம் தேவை என்பது வற்புறுத்தப்பட்டது.

அகில-இந்திய சர்வீசுகள் உட்பட யூனியன் சர்க்காரின் பணிகளில் சமவாய்ப்பு வசதிகளுடன் பிற மொழியினர் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தி பேசாதார் வேண்டும்வரை ஆங்கிலம் அகில-இந்திய ஆட்சிமொழியாக நீடித்து இருந்து வரவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அரசியல் சாஸனத்தை திருத்தி இந்த அபயத்தை அளிப்பதாக நேருஜிவாக்களித்தார். ஆனுல் அதன்படி இதுவரை நடைபெறவில்லை. ஆட்சிமொழிச் சட்டத்துக்கு திருத்தம் செய்து அதன் மூலம் வாக்குறுதியைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு காலம் கடத்திவருகிருர்கள். இதற்கிடையே ஆட்சிமொழி என்று பேசாமல், இணைமொழி என்று யூனியன் அரசாங்கம் குறிப்பிட்டு வருவதும் அது இந்தியாகத்தான் இருக்க முடியும் என்று கல்வி மந்திரி கூறுவதும், ஆங்கிலத்தை ஐந்தாண்டுகளில் போதனுமொழி நிலையிலிருந்து விரட்டிவிடப் போவதாக அவர் மார் தட்டுவதும், இந்தி பேசாதவர்களுக்கு ஒரு பெரிய அறைகூவலாகும்.

இந்த தேசம் இந்திக்காரர்களுடைய உடைமையல்ல. இது எல்லா ராஜ்யத்தவருக்கும் சொந்தமானது. இந்தி பேசுவோர் சுமார் நாற்பது சதத்தினர்தாம். சேர்ந்தாற்போல் உள்ள ஐந்து ராஜ்யங்களில் இந்தி பேசுவோர் வசிக்கிருர்கள். அவர்களுக்கு இன்று செல்வாக்கு இருக்கிறது என்ற காரணத்தால், அதைப் பிறர்மீது திணிக்கின்ற சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது பிறருக்கு ஆத்திரமூட்டக்கூடிய முயற்சி.

யூனியன் சர்வீஸ் கமிஷன் பரிட்சைகளை எல்லா மொழிகளிலும் எழுதலாம் என்ற 'சலுகை'க்கு இந்திக்காரர்கள் இணங்கியபோதே அவர்களுடைய தந்திரத்தை பிறர் உணர்ந்துகொள்ளா போனதன் விளைவாகத்தான் தேச விரோதமான மொழிக் கொள்கை இன்று விசுவரூபம் எடுத்துள்ளது. புதுக் கொள்கையின் அபாயத்தை உணர்ந்து, மக்களை எச்சரித்து, இந்திய சர்க்காரை சரியான வழிக்குத் திருப்பியாகவேண்டும். பொது வாழ்விலும், பதவிப் பொறுப்பிலுமுள்ள பெருந்தலைவர்களது கடமை இது என்பதை விளக்கத் தேவையில்லை.

●

உ-ம் பக்கத் தொடர்ச்சி

மாறுமா? யாருக்காகக் காதலிக்கிருர்கள்? ஊருக்காகவா? தங்களுக்காக! இதிலே ஊருக்கு என்ன உரிமை? வாயைத் திறந்து அலறுகிறது! உளறுகிறது!

நாள்குறித்து நாழிகை குறித்து நாங்களாக அறிவிக்க இருப்பதை நீங்களாகத் தெரிந்துகொண்டீர்களே! ஊர்மக்களே! இதுவும் நல்லதற்குத்தான்! இப்படி நினைத்தது தலைவியின் மனம். இருந்தாலும் அவள் இதயம் எரிந்தது. பேசினுலும் பரவாயில்லை! சிரிக்கிருர்களே சிரிப்பு! எதற்காகச் சிரிப்பது? இதில் என்ன இருக்கிறது சிரிப்பதற்கு?

ஊர் சிரித்தாலும் உறவினர் சிரித்தாலும் வேறு யார் சிரித்தாலும் பொறுத்துக்கொள்ளலாம். ஒட்டி உறவாடி உள்ளத்தோடு உள்ளமாக ஒன்றுபட்டுவிட்ட இந்தத் தோழி சிரிக்கிருளே—அதுவும் எங்கோ மூலையிலே அல்ல; என் எதிரில் நான் காணுகிற விதத்தில் சிரிக்கிருள். என்னை எள்ளி நகையாடுகிருள். என் எதிரில் துள்ளி விளையாடுகிருள்!

'என்னடி சிரிப்பு? என்ன அப்படிக் காணுததைக் கண்டுவிட்டாய்? 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' நான்பட்ட பாட்டை இவள் பட்டால் சிரிப்பாளா? விவரம் புரியாதவள்! விஷயம் தெரியாதவள்! யாருக்கோ சொல்கிற மாதிரி தோழியை ஒரு தாக்குத் தாக்குகிருள் தலைவி. இந்தக் காட்சியைப் படமாக்கிக் குறளாக்கித் தருகிருர் வள்ளுவர். அந்தக் குறள் இதோ:—

''யாம்கண்ணிற் காண நகுப!
அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு''

# சட்டம்-ஒழுங்கு சீர் குலைந்ததா?

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி நாட்டில்—சட்டம் அமைதி ஒழுங்கு குலைந்துவிட்டது என்று தீர்மானம் போட்டிருக்கிறது.

இன்றையத் தினம் பக்தவத்சலமும் காமராசரும் அமைச்சர்களாக இல்லாவிட்டாலும் அவர்களது வீட்டில் போலீஸ்பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது — அண்ணாவின் பெருந்தன்மையினால் இப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் அண்ணா அவர்களும் மற்றவர்களும் அமைச்சர்களாக இல்லாமல் காங்கிரசார் பொறுப்பேற்றிருப்பார்களேயானால் போலீஸ் பாதுகாப்புக்கூட அல்ல; குண்டர்களை வீட்டுக்குள்ளே ஏவிவிட்டிருப்பார்கள்.

கடந்த 65 சனவரி 26-ம் நாளன்று இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் தன்னுடைய வீட்டில் கருப்புக் கொடியேற்றினார் என்பதற்காக அவரது வீட்டை காங்கிரஸ் குண்டர்கள் முற்றுகையிட்டு — பெண்டு பிள்ளைகள் கூச்சலிட குழந்தை குட்டிகள் அலறித்துடிக்க உள்ளே நுழைந்தார்கள். இலட்சிய நடிகர் தோட்டத்திலேயிருந்து வருவதற்குள் மாடி உச்சியிலே இருந்த கருப்புக் கொடியை அறுத்தெறிந்தார்கள். வீட்டுக்கு வந்த இராசேந்திரன் முதலமைச்சருக்கு போன் செய்து ராசேந்திரன் எம். எல். ஏ. பேசுகிறேன். 200 குண்டர்கள் என் வீட்டுக்குள் நுழைந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள், உடனே தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டபோது என்ன சொன்னார் பக்தவத்சலம்?

"என்னால் முடியாது. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்!" என்றார்.

ஆனால் இப்போது சின்ன பெயர்ப் பலகை—பக்தவத்சலம் வீட்டில் 'பக்தவத்சலம்' என்று எழுதப்பட்டிருந்தபோர்டு யாராலேயோ அகற்றப்பட்டிருக்கிறது. 'இனி அது தேவையில்லை' என்று கருதி எடுக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் அது கண்டிக்கத் தக்கது-போலீஸ்காரரின் அலட்சியத்தால் நிகழ்ந்தது என்பதால் அந்தப் போலீஸ்காரரையே சஸ்பெண்டு செய்திருக்கிறோம். காங்கிரஸ்காரர்களைக் கேட்கிறேன்! இதற்குப் பெயர் சனநாயகமா அல்லது அதற்குப் பெயர் சனநாயகமா?

எங்களைப்போல் சனநாயகத்துக்கு மதிப்புக் கொடுத்த நிகழ்ச்சியை இருபதாண்டு காலத்தில் கண்டதுண்டா?

இப்போது நாட்டில் சட்டம்—ஒழுங்கு—அமைதி இல்லை என்கிறார்கள். 20 ஆண்டு காலக் காங்கிரஸ் ஆட்சியில் என்னென்ன கொடுமைகள் நடைபெற்றன!

முதுகுளத்தூரில் இமானுவேல் என்ற ஆதிதிராவிட இளைஞன் வெட்டப்பட்டான். அவன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அரிஜனங்களுக்கும்—மறவர் குலத்தவருக்குமிடையே கைகலப்பு—கலகம்—ரகளை—ரத்த வெள்ளம் ஏற்பட்டது வயல்களில் பயிருக்குப் பதில் தலைகள்தான் நடப்பட்டன. குங்குமம் அழிக்கப்பட்டது. ஐநூறு பேர்



ஆயிரம் பேர் என்று படுகொலையாயினர். எங்கு பார்த்தாலும் படுகொலை! படுகொலை! முதுகுளத்தூரில் இராணுவ ஆட்சியே நடைபெற்றது.

இது தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்டார்கள். அந்த ஐவரும் எதிரே போலீஸ்காரர்கள் நீட்டிய துப்பாக்கியோடு நின்றிருந்தனர். போலீஸ் அதிகாரி ஒன்று—இரண்டு—மூன்று என்று சொல்ல போலீசாரின் துப்பாக்கியிலிருந்த குண்டுகள் அவர்களது நெஞ்சிலே பாய்ந்து அந்தக் கட்டிளங்காளைகள் மண்ணிலே சாய்ந்தனர். காங்கிரஸ் நண்பனே! அப்போது எங்கே போயிற்று சட்டம் - ஒழுங்கு—அமைதியெல்லாம்?

சேலத்திலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 22 பேர்! அதிகாரிகளிடம் உரிமை கேட்ட தோழர்கள் சிறைச்சாலையிலேயுள்ள சின்ன கூண்டுகளுக்குள்ளே பூட்டப்பட்டு—இரும்புக் கம்பிகளுக்கிடையே துப்பாக்கியை நுழைத்து அவர்களைப் பொரிந்து தள்ளி—சட சடவெனச் சுட்டுச் சாய்த்து மீன் சந்தையிலே மீன்களைப் போடுவதுபோல அந்தத் தோழர்களைப் போட்டார்களே—அப்போது இந்தச் சட்டம்—அமைதி—ஒழுங்கு எங்கே போயிற்று?

அன்றைக்கு ரத்தம் சுவைத்த அந்த நாக்குத்தானா இன்றைக்கு சட்டம்—ஒழுங்கு பற்றிக்கேட்கும் இந்த நாக்கு?

காங்கிரஸ் எம். எல். ஏ. ஜெயராஜ்! அவரது கால் வெட்டப்பட்டது என்ற செய்தியறிந்ததும் அறிஞர் அண்ணா அவர்கள் தந்தியடித்து ஆறுதல் கூறினார்.

கால் துண்டிக்கப்பட்டார் என்பதையறிந்ததும் நானும் அமைச்சர் கோவிந்தசாமி அவர்களும் ஓடோடிச் சென்று நாகப்பட்டினம் மருத்துவமனையிலே அவரைச் சந்தித்து ஆறுதல் கூறினோம்.

"கவலைப்படாதீர்கள் — இந்தக் காரியத்தில் ஈடுபட்டவன் யாராயிருந்தாலும்—எந்தக் கட்சிக்காரனாக இருந்தாலும் தண்டித்தேதீருவோம்; நீதி கிடைத்திடச் செய்வோம்" என்று உறுதி கூறிவிட்டு வந்தோம்!

சொல்லுங்கள் பார்ப்போம்: வண்ணைப் பாண்டியன் கொல்லப்பட்டபோது — தூத்துக்குடித் தங்கம் கே. வி. கே. சாமி—நெல்லிக்குப்பம் மஜீத்—மொய்தீன்பிச்சை—மயிலாடி மாரியப்பன்—ஆலந்தூர் சின்னான் எதிரிகளால் வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டபோது — கோவை ஆரோக்கியசாமி — உடையார் பாளையம் வேலாயுதம் ஆகியோர் சாகடிக்கப்பட்டபோது காங்கிரஸ் மந்திரிகளில் ஒருவராவது ஒரு சொட்டுக் கண்ணீர் வதுவிட்டதுண்டா? கண்ணீர் வேண்டாம் அனுதாபம் கூறியதுண்டா?

அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாகஇருக்கட்டும், பத்து மாதம் ஒருதாய் சுமந்து பெறவில்லையா? அவர்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள் அல்லவா?

கட்சி வேறுபாடு இருக்கட்டும் அவர்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்!

அப்போதெல்லாம் சட்டம்—அமைதி ஒழுங்குபற்றி; பேச வக்கில்லை வகையில்லை—உள்ளமில்லை உள்ளமிருக்க வேண்டிய இடத்திலே பள்ளமிருந்தது! ●

# படமும் பாடமும்!

—[ எஸ். ஆர். ]—

முடிவினைப் படிப்பவர்களுக்கு முன் கூட்டியே எடுத்துச் சொல்வது ஒருவகை. அப்படி இல்லாமல் படிப்பவர்கள் வேண்டுமானால் பொருள் கொள்ளும்படி விடுவது மற்ருெரு வகை.

விடுதலை நாளன்று வெளி வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் 'இதழில்' மேற் கூறிய இரண்டாம் வகையைச் சேர்ந்த கார்ட்டூன் ஒன்று பிரசுரமாகியுள்ளது.

மதுவிலக்கு என்ற எரியும் கப்பலில் தமிழக முதலமைச்சர் மட்டும் தன்னந்தனியாய் நின்று ஆபத்துக்குள்ளாகியிருப்பதைப்போல ஒரு படம் வரையப்பட்டிருக்கிறது.

படத்தை வரைய வந்தவரின் உள் நோக்கம் எது என்பதும் புலனுகவில்லை. படத்தில் எழுதப்பட்டுள்ள தமிழக முதலமைச்சரின் நிலை சரிதானு என்பதும் தெளிவாக்கப்படவில்லை.

படத்தை வரைந்ததன் நோக்கத்தையும் எப்படி வேண்டுமானுலும் பொருள் கொள்ளலாம். படத்தைப் பார்ப்பவர்களும் எந்த விதத்தில் கருத்துகொள்ள வேண்டுமென்பதும் விளக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட படங்களை 'இரண்டுங்கெட்டான்' என்று அழைத்துவிட முடியாது. இரண்டு வகையிலும் பொருள் படட்டுமே என்று வேண்டுமென்றே வரைவதுதான் அவை.

கப்பலே பற்றி எரியும்போது வெளியே தாண்டி குதித்துவிட வேண்டுமென்று 'எக்ஸ்பிரஸ்' கருதினுல் அதை வெளிப்படுத்துவதற்கு இன்னும் சற்று உறுதியான தொனியுடன் படம் வரைந்திருக்கலாம்.

எரியும் கப்பலிலிருந்து வெளியேறிவிடுவதுதான் நியாயம் என்ருலும் கப்பல் ஏன் எரிய வேண்டும்? எரிவதற்கு எவர் காரணம்? எரிய வேண்டிய நிலை எப்படி வந்தது? என்பன போன்ற விளக்கங்களை 'எக்ஸ்பிரஸ்' ஏடு எடுத்துக்கொண்ட உதாரணத்தின் மூலம் விளக்குவது என்பது கடினமான காரியம்.

மதுவிலக்கு என்ற கொள்கையை 'எக்ஸ்பிரஸ்' தொடர்ந்து கண்டித்தே வந்திருக்கிறது. மது ஒரு மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவை என்ற பொருளில் அல்ல—

—மதுவிலக்கை அமுல் நடத்துவதில் அரசுகள் சிரமம் மேற்கொள்கின்றன அல்லது சிரத்தை காட்டுவதில்லை என்ற காரணத்துக்காக.

மதுவிலக்கு அமுலாவதில் ஏற்பட்ட தோல்விகள் மதுவிலக்கை தொடர்ந்து அமுல் நடத்துவேன் என்ற முயற்சிக்கு ஏன் கேலிப்பட்டத்தைச் சுமத்தவேண்டுமென்பது புலனுகவில்லை.

மதுவிலக்குத் தேவையில்லை என்பதைச் சொல்வதற்காக எத்துணையோ இன்னல்களுக்கு இடையிலும் மதுவிலக்கினை அமுல் நடத்துபவர்களை பாராட்டாவிட்டாலும் பரிகசிக்கத் தேவையில்லை.

மது தேவை அல்லது தேவை இல்லை என்பது வேறு.

மதுவிலக்கினை அமுல் நடத்த முடியவில்லை; இதனுல் தேவையில்லை என்பது வேறு.

மது தேவை என்பவர்கள் மதுவிலக்கினை அமுல் நடத்துபவர்களை விமர்சிக்கலாம்; வேண்டாம் நீக்கிவிடுங்கள் என வேண்டுகோளும் விடலாம்.

மதுவிலக்கு தேவைதான் ஆனுல் அதை அமுல் நடத்த முடியவில்லை எனவே விட்டுவிடுங்கள் என்று கூறுபவர்கள் எப்படியேனும் அதனை அமுல் நடத்துபவர்களை விளையாட்டுப் பார்வை பார்ப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

—'எக்ஸ்பிரஸ்' இதழின் கார்ட்டூன் இந்த இரண்டாவது வகையின்பாற்பட்டதாகத்தான் இருக்கிறது.

விடுதலைக் கொள்கையோடு சேர்த்துச் சொல்லப்பட்டதே—

—காந்தியடிகளின் உயிருடன் ஒன்றியதாயிற்றே—

—அரசியல் சட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாயிற்றே—

இருந்தும் — இவ்வளவு ஆண்டுகளாகியும் நீங்கள் ஆட்சி செய்யும் மாநிலங்கள் முழுமையிலும் கூட முழு அளவு மதுவிலக்கினை ஏன் அமுல் நடத்த முடியவில்லை என்ற கேள்வியை சுதந்திர நாள் இதழில் எக்ஸ்பிரஸ் படம் வரைந்து கேட்டிருந்தால்கூட காங்கிரஸ்காரர்களுக்கு பாடம் கற்பித்த மாதிரியாக இருந்திருக்கும்.

ஒரு சில பகுதியினர் நம்பி எதிர்பார்த்த நிலையிலும்—

—நிதிப் பற்ருக் குறைகளுக்கு இடையிலும்—

மானியம் தந்து அரிசி விற்பனை செய்வதால் ஏற்பட்ட சிரமங்களுக்கிடையிலும்—

கொடிய குடிப்பழக்கத்தின் காரணமாக அண்மையில் நூற்றுக்கணக்கானேர் உயிர் துறந்ததற்குப் பின்னரும்—

மீண்டும் ஒருமுறை தமிழக முதலமைச்சர் மதுவிலக்குக் கொள்கையில் உள்ள பிடிப்பினை வலியுறுத்திக் காட்டியிருப்பது 'எக்ஸ்பிரஸ்' இதழுக்கு ஏன் இத்தகைய பொருளைக் கொடுத்திருக்க வேண்டுமென்று தெரியவில்லை.

மதுவிலக்கினை எப்படியும் அமுல் நடத்தியே தீருவேன் என்ற தமிழக முதலமைச்சரின் உறுதியை 'எக்ஸ்பிரஸ்' பிடிவாத குணமாகவோ பரிதாபத்துக்குரிய செயலாகவோ கருதியிருப்பது வருந்தத்தக்க செய்தியாகும்.

அரசியல் பொருளாதார பிரச்சனைகளைக் காட்டி மதுவிலக்கினை ரத்து செய்வது அதிக நேரம் பிடிக்கக் கூடிய வேலை இல்லை.

சமுதாயம் முழுமைக்குமான ஒரு மொத்த நன்மைக்குத்தான் மதுவிலக்கில் மீண்டும் மீண்டும் உறுதிப்பாட்டைக் கடைப்பிடித்து வரும் செயல் என்பதனை 'எக்ஸ்பிரஸ்' தெரிந்துகொள்ள வேண்டும்.

கேலிப் படமென்ருலும் நல்லனவற்றை சிரிப்புக்கு வித்தாகக் கொள்ளத் தேவை இல்லை.

அல்லாதனவற்றை சற்று கடிந்தேனும் இடித்துரைப்பதுதான் நல்லது.

அண்ணு அவர்களைக் காட்டி "அவர் எப்படி அமுல் நடத்துகிருர் பாருங்கள். உங்களால் முடியவில்லையே?" என்று காங்கிரஸ் அமைச்சர்களை 'எக்ஸ்பிரஸ்' கேலி செய்திருந்தால் சுதந்திர நாளன்று ஆற்ற வேண்டிய கடமைகளில் ஒன்றை முடித்ததாக இருந்திருக்கும்!

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம்
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.